1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 2-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### பாராளுமன்றம் கலைக்கப்படுமா ?

வருகிற சித்திரைமாதம் 4-ம், 6-ம், 7-ந்திகதிகளிலே பொதுத்தேர்தலை நடத்தும்படியாய் மாசிமாதம் 23-ந் திகதியன்று பாராளுமன்றம் கலைக்கப்படுமெனச் செய்தி பிறந்திருக்கிறது. வருகிறமாசிமாதம் ஐக்கியதேசியக்கட்சியின் வருடாந்த மகாநாட்டிலே 'சிங்களம்மட்டும்" என்ற பிரேரணைபற்றி ஓர்தீர்க்கமான முடிவெடுக்கப்பட்டதும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு நாட்டுமக்களின் தீர்ப்பைக்கோரிப் பொதுத்தேர்தல் நடத்தப்படுமெனத் தெரியவருகிறது.

### கிளிநொச்சி நீதிஸ்தலம்

ஆனையிறவு, துணுக்காய் முதலாம் இடங்களிலுள்ளமக்கள் தங்கள்வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு இதுவரை 50 அல்லது 60மைலுக்கப்பாலுள்ள சாவகச்சேரிக்கு வந்துகொண்டிருந்தனர். தற்போது கிளிநொச்சியில் நவமாக அமைக்கப்பட்ட நீதிஸ்தலமானது சென்ற 8-ந்திகதியன்று பாராளுமன்றத்திலே சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதியும் நீதியமந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியுமான திரு. வி. குமாரசாமி அவர்களால் திறந்துவைக்கப்பட்டமையாலே அவர்களின் கஷ்டங்களும், பொருட்செலவும் குறைந்துவிடுமெனலாம். இந்த நீதிஸ்தலக்கட்டடம் அதிகபொருத்தமற்றதும், மிகப் பழமையானதுமாய் இருப்பதால் சகலவசதிகளுங்கூடிய புதியகட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரதமரின் வெள்ளிவிழா

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் அரசியலில் ஈடுபடத் தொடங்கிய 25-ம்ஆண்டு நிறைவுவிழா சமீபத்தில் வருகின்றது. அதை முன்னிட்டு அவருக்கு ஓர்வரவேற்புஉபசாரம் அளிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியாகச் சனப்பிரதிநிதிகள்சபை, செனற்சபை இரண்டினையுஞ்சேர்ந்த 25 அங்கத்தவர்களைக்கொண்ட கமிற்றிஒன்று அரசாங்க பாராளுமன்றகுழுவாலே சென்ற செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கமிற்றியின் தலைவர் உணவு-கமத்தொழில் மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களாவர்.

### யாழ்ப்பாண மேயர்

காதி எம். எம். சுல்தான் அவர்கள் யாழ்ப்பாண மேயர்பதவியைச் சென்ற 7-ந்திகதியன்று இராசினாமாச் செய்திருக்கின்றார். முன்னர்செய்துகொள்ளப்பட்ட ஒழுங்கின்படியே அவர் இராசினாமாச் செய்யலாயினர். இம்மாதம் 9-ந்திகதியுடன் மேயர்பதவியிலிருந்து விலகுவதாக அவர் தமது இராசினாமாவில் குறிப்பிட்டிருக்கின்றார். யாழ்ப்பாண நகரசபைஅங்கத்தவர்கள் செய்துகொண்ட உடன்பாட்டின்படி திரு. எஸ். எஸ். நவரத்தினம் அவர்களே புதியமேயராகத் தெரிவுசெய்யப்படலாம். மேயர் தமதுடைய பதவியை இராசினாமாச் செய்தமையாலே காலியாயிருக்கும் அந்தஸ்தானத்துக்குப் புதிதாக ஒருவர் தெரியப்படுமாறு யாழ்ப்பாண நகரசபைக் கமிஷனரான திரு. ஏ வி. சின்னையா அவர்கள் அடுத்த 16-ந்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-30மணிக்குச் சபையைக்கூட்டவிருக்கின்றார்

### புதியசிரேஷ்டர் நியமனம்

இலங்கையிலுள்ள கிறிஸ்தியன் பிறதர்மார்களின் அதிசிரேஷ்டராய் இருந்துவந்த சங். பிறதர் லூக் கிறெகறி அவர்களிடமாகத் தற்போது வத்தளை அர்ச் அந்தோனியார் கல்லூரி அதிபராய் இருந்துவருகிறவரான சங். பிறதர் வின்சென்ற் யோசெவ் அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். கிறிஸ்தியன் பிறதர்மார்சபையின் அதிசிரேஷ்டரான அதிசங். பிறதர் அவர்களாலே இந்தநியமனஞ் செய்யப்படலாயிற்று. தற்போது 39 வயதுடையவரான சங். வின்சென்ற் யோசெவ் பிறதர் அவர்கள் 1935-ம் ஆண்டு ஐரோப்பாவிலிருந்து இலங்கைவந்து சேர்ந்து கந்தானையிலும், குருநாகலிலும் ஆசிரியதொண்டாற்றியபின் 1942-ம் ஆண்டு வத்தளை, அர்ச. அந்தோனியார்கல்லூரியைத் திறந்தார். இவர் லண்டன் சர்வகலாசாலை பி ஏ. பட்டதாரியும், அதேசர்வகலாசாலையிலேயே கல்வியில் டிப்ளோமா பெற்றவருமாவர்.

### அக்குயினஸ் கழகம்

கொழும்பு, சஞ்சூசையப்பர்கல்லூரியிலே பட்டதாரிகளாவதற்குப் படித்துவருகின்ற மாணவர்களின்பகுதியான அக்குயினஸ் கழகம் இப்புத்தாண்டின் புதுத்தவணையோடு அங்கு கின்ஸ்லி வீதியிலுள்ள புதியஇடத்துக்கு மாறுகின்றது. இதற்கென அங்கே அதிமேற்றிராணியாரின் மாளிகையடுத்து, மிகவிசாலமான மூன்றுமாடிக் கட்டடம் ஒன்று நவமாகக் கட்டப்பட்டிருக்கிறது. இப்புதியகழகத்திலே மாணவர்களுக்குக்கிடைக்கக்கூடிய பலவசதிகளிலே பெரியநூல்நிலையம்ஒன்றும், ஓர்வாசிகசாலையும் அடங்குவனவாகும்.

### அதிவண. எஸ். என். அருள்நேசன் சுவாமியார்

சம்பத்திரிசியார் கல்லூரித்தலைவரான அதிவண. எஸ். என். அருள்நேசன் சுவாமியவர்கள் நம்மேற்றிராணியாண்டவரின் ஆலோசனைச்சங்கத்தில் ஒருவராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

### வாக்காளர்குழுவின் வேண்டுகோள்

கத்தோலிக்கவாக்காளரின் குழு ஒன்று சமீபத்திலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களுக்குச் சமர்ப்பித்திருக்கும் ஓர்மனுப்பத்திரத்திலே : சமயப்பிணக்குகளை உண்டுபண்ணுவதான எந்தஒருமுயற்சியிலும் பிடிவாதமாக ஈடுபடுவதைத் தண்டனைக்குரிய ஓர் குற்றச்செயலாக்கும் சட்டம் ஒன்றை ஆக்கவேண்டுமெனக் கேட்டு அவரைத்தூண்டிவிட்டிருக்கின்றது. மேலும்சமயதலைவர்களை அவமதிக்கின்ற, அன்றேல் சமயபோதனைகள் அல்லதுதத்துவங்களைப் பரிகசித்துநிந்திக்கின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், அல்லதுமற்றும்பிரசுரங்கள்எதையும அச்சிடுவதோ, பரப்புவதோ, அல்லது விற்பனவுசெய்வதோ சட்டவிரோதமான செயலெனப் பிரகடனஞ்செய்ய வேண்டுமென்றும் அவரைக்கேட்டிருக்கின்றது. இத்தகைய தகாதமுயற்சிகளிலே கலந்துகொள்ளுகின்றமக்களைக் கட்டுப்படுத்தப்போதிய நடவடிக்கைகளை அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லையேயென்றும் அம்மனுப்பத்திரத்தில் கவலைதெரிவித்திருக்கின்றது.

### கூட்டுறவுச் சுதேசமருந்துச்சாலை

யாழ்ப்பாணநகரிலே ஆஸ்பத்திரிவீதியிலுள்ள மல்லிகட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள சுதேசகூட்டுறவுமருந்துச்சாலையைச் சென்ற 10-ந்திகதிசெவ்வாயன்று வடமாகாணஅதிபர் திரு. எம. ஸ்ரீ கந்தாஅவர்கள் சுதேசவைத்தியர்களும், பிறருமாகத் திரளானோர் குழுமியிருந்தசமுகத்திலேதிறந்துவைத்தனர். இம்மருந்துச்சாலையைச் சுதேசவைத்தியர்களின் கூட்டுறவுச்சங்கம் அமைத்துள்ளது. சுதேசவைத்திய கலைமன்ற அங்கத்தவரான திரு. ஏ. எம். பி. சமேதார், எல். ஐ எம். அவர்களே இச்சங்கத்தின் தலைவராவர். திரு. ஏ. இராசநாயகம், எல். ஐ எம். அவர்களே இதன்காரியதரிசியாவர். இலங்கையில் முதன்முதலாகத் திறக்கப்பட்டுள்ள சுதேசகூட்டுறவு மருந்துச்சாலை இதுவேயாகும். இலங்கையின் முதலாவது ஆங்கில கூட்டுறவு வைத்தியசாலையும் யாழ்ப்பாணத்திலேயே இற்றைக்கு 20வருடங்களின்முன் முன்னாயில் திறக்கப்படலாயிற்று.

### கட்சியிலிருந்து விலகுவேன்

தம்பலகாமம் வடக்கிலே சென்ற 10-ந்திகதி நடந்தேறிய பொதுக்கூட்டமொன்றில் மூதூர்த்தொகுதிப்பாராளுமன்ற பிரதிநிதியான ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி அவர்கள் பேசியபோது : இன்று இலங்கையில் பாஷைப்பிரச்சினை உச்சநிலைஅடைந்துள்ளது ; அடுத்தமாதம் 18-ந்திகதி களனியில்கூடவிருக்கும் ஐக்கியதேசிய கட்சிமகாநாட்டில் சிங்களம்மட்டுமே அரசகருமமொழியாகவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டால் நான் அக்கட்சியிலிருந்துவிலகி ஓர்முற்போக்கானகட்சியில் சேர்ந்துகொள்வேன்" எனக் கூறியிருக்கின்றார்.

### பிரதமரின் நடவடிக்கை

தமக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓர்மனுவின்பேரிலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் எந்தவிதமான சமயதுவேஷப் பிரசுரங்களையும் பிரசுரஞ்செய்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளெடுக்குமாறு உள்நாட்டு மந்திரியாரைக் கேட்டிருக்கின்றார். அதற்கிடையிலே லங்காபுத்தமண்டாலயமும் சமயதுவேஷப் பிரசாரம், சமயதுவேஷப் பிரசுரங்களின் பிரசுரம் சம்பந்தமாய்க் கலந்துவிவாதிக்குமாறு புத்தபிக்குகளின் கூட்டம்ஒன்றைநடத்த ஆயத்தப்படுகின்றது.

### நடுத்தரவகுப்பினருக்குக் காணி

நடுத்தரவகுப்பினரான இலங்கையருக்கெனக் கிளிநொச்சி நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் எஞ்சியிருக்கும் காணித்துண்டுகளைப் பெற்றுக்கொள்ள முன்வருவாரின் மனுக்கள் நிகழும் தைமாதம 17-ந்திகதி மத்தியானம்வரை யாழ்ப்பாணக் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும் தனிப்பட்டவராயிருந்தால் வருடம்ஒன்றுக்குப் 12,000 ரூபாவுக்குக் குறைந்த வருமானமும், விவாகஞ்செய்தவராயிருந்தால் இருவருமாக 24,000 ரூபாவுக்குக் குறைந்த வருமானமும் உடையவர்களே மனுப்பண்ணத் தகுதியுடையவர்கள்.

### காலநிலை

யாழ்ப்பாணத்திலே நெடுநாள்மழை பெய்யாததால் நெற்பயிர்கள் வாடுவதைக்கண்டு அஞ்சியவர்களாய் வானத்தை ஏறெடுத்தவண்ணமாய் வாடியிருந்த கமக்காரரெல்லாம் மனங்குளிரும்படியாக இவ்வாரமுதல் மழை பெய்துகொண்டு வருகின்றது. முதன்முறையாக ஜப்பானியமுறைப்படி இங்கே நெற்பயிர்செய்த கமக்காரரும் மழையின்மையாலே தங்கள்முயற்சியும் பலனற்றுப் போய்விடுமோவென்று கவலைகொண்டிருந்தனர். ஆனால், அவர்களும் இப்போது மழைபெய்துகொடுப்பதால் மனத்தென்பு உடையவர்களாய்க் காணப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் விருட்ச வரலாறு

இராமுழுவதும் மூவரும் பிரயாணஞ் செய்தனர். தாய் தன்இளங்குழந்தையை மடியில்வைத்துக்கொண்டு கழுதைமேல் பிரயாணஞ்செய்தாள். அவள் பத்தா கழுதையின் கடிவாளத்தைப் பிடித்தவண்ணம் கழுதையணடையில் நடந்துசென்றார். இருவர்முகத்திலும் களைப்பின்குறிகள் காணப்பட்டன. மரியாளின்முகத்தைக் கூர்ந்துகவனித்த சூசையப்பர், "இதோ! உதயத்தின் தாரகை தோன்றியது; உன்களைப்பைப்போக்க அதோதெரியும் வீட்டில் சற்றேதங்கிப் போவோம்" என்றார். அவளோ உடனே பதிலொன்றும் கூறவில்லை. தன்கையிலிருந்த தனது சிறுபாலகனைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டாள். பின்பு சற்றுப் பின்புறமாக நோக்கினாள். தொலைதூரத்தில் பெத்லகேம்சிற்றூரின்குன்றுகள் மறைவதைக் கண்டாள். அவள்முகத்தில் கவலைக் குறிகள் தோன்றின.

"எகிப்து இன்னும் வெகுதூரத்திலிருக்கிறது; பலநாட்கள் பிரயாணஞ் செய்யவேண்டும்; பற்பலஇடங்களில் தங்கி இளைப்பாறவேண்டும்; பச்சை உடம்பாகிய உனதுஉடலை வாட்டமுடியாது" என்று சூசையப்பர் மீண்டும் இயம்பினார்.

"ஆம், எகிப்து வெகுதூரத்திலிருக்கிறது; ஆயினும், கடவுளின்காம நம்மைக்காப்பாற்றும்" என்றது அவ்விளமங்கையின் இனியகுரல்

"மெய்தான், அவர்நம்மைக் காப்பாற்றுவார்என்பது நிச்சயம்; ஆயினும், உன்னையும், இக்குழந்தையையும் நான்கவலையுடன் கண்காணிக்க வேண்டுமென்பது அவரதுகட்டளையும், சித்தமுமாகும்; ஆதலால், இந்தவழியைவிட்டு அதோ அங்கேதெரியும் குடிசைக்குச் சென்றால், நீ சற்று இளைப்பாறிக் கண் அயரலாம்; பிறகு சிற்றுண்டிஅருந்திநாம்வழியேகுவோம்" என்றார் சூசையப்பர்.

கிழக்குப் பக்கத்திலிருந்து பிரிந்து சென்ற ஓர் ஒற்றடிப்பாதையில் கழுதையை அவர்செலுத்தினார். சற்றுத் தூரஞ்சென்றதும் அவர்கள் குடிசையை அடைந்தனர். அதில் ஓர்எளிய குடும்பம் வசித்திருந்தது. அதிகாலையாய் இருந்தபோதிலும் குடிசையின் வாசலில் இருகுழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. வழிப்போக்கர் யாரோ தங்கள்குடிசையை நோக்கி வருவதைக்கண்ட அவர்கள் பிரமிப்படைந்து ஒரேகுரலில் "அப்பா, அம்மா யாரோவந்திருக்கிறார்கள்" என்று கூச்சலிட்டார்கள். இச்சப்தத்தைக் கேட்ட பெரியவர்ஒருவர் வீட்டினின்று வெளியே தலையைநீட்டியவண்ணம் பார்த்தார். ஆரோ இரண்டுபிரயாணிகள் தமது வீட்டிற்குமுன்பாக நிற்பதைக்கண்டு சற்றுஆச்சரியப்பட்டார். என்றாலும், விரைவிலேவெளிவந்து, அவர்களை அன்புடன்உபசரித்தார். "நீங்கள் பிரயாணிகள்போல் இருக்கிறதே; ஐயோ! களைப்புற்றிருக்கிறீர்களே; வாருங்கள், வந்துஇளைப்பாறுங்கள்; நாங்கள்ஏழைகள்; ஆனால், எங்கள்உணவும், இல்லமும் உங்களுடையவையாகும்" என்று கருணையோடு சொன்னார்.

"உமக்கு மெத்தநன்றி; என்பெயர் சூசையப்பர்; என்மனைவி மரியம்மாளோடும், குழந்தையோடும் பெத்லகேமிலிருந்து இராவெல்லாம் பிரயாணஞ் செய்துவந்திருக்கிறோம்; எகிப்துக்குப் போகவேண்டும்; என்மனைவி சற்று இளைப்பாறவே உமதுஇல்லத்தை நாடினோம்" என்று பதிலுரைத்தார் சூசையப்பர்.

"தாராளமாய் வாருங்கள்; இஸ்ராயேலின்தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! சீமோன்வீடு ஏழ்மையானது; ஆனால், அதிலுள்ளரொட்டியும், இரசமும் உங்களுடையன" என்றுசொல்லித் தமதுமனைவியை அழைத்தார். றெபெக்கா தன்கணவனின் குரலைக் கேட்டு வெளியேஓடிவந்து, பிரயாணிகளைக்கண்டு நல்வரவுகூறி, மரியம்மாவிடமிருந்த பாலகனைவாங்கிக் கையிலேந்தினாள். சூசையப்பர் உதவிசெய்ய மரியம்மாள் கோவேறு கழுதையைவிட்டுக் கீழ்இறங்கி, றெபெக்காவைப் பின்பற்றி வீட்டினுள்சென்று, உட்கார்ந்து தன்பாலகனை மீண்டும்வாங்கி மார்போடுஅணைத்துத் தன் மடியில் கிடத்தினாள். ஆகாரம் முஸ்திப்புச் செய்ய றெபெக்கா அங்குமிங்கும் விரைந்துகொண்டிருந்தாள். சூசையப்பரோ வீட்டுவாசலிலிருந்த ஓர் அத்திமரத்தில் கோவேறுகழுதையைக் கட்டிவிட்டுச் சீமோனோடு பேசிக்கொண்டே வீட்டிற்குள்சென்றார்.

வீட்டுவாசலில் விளையாடிக்கொண்டிருந்த பாலர்கள்இருவரும் சந்தடிசெய்யாமல், மரியாயின்மடியிலிருந்த குழந்தையை உற்றுநோக்கியபடியே வெகுநேரம் நின்றுகொண்டிருந்தனர். பிறகு சற்றுத்தைரியங்கொண்டு, குழந்தையருகில் சென்றுஉட்கார்ந்துஅதன் கைகளை மெதுவாகத்தொட்டுப்பார்த்தனர். தூங்கும்குழந்தை மெதுவாகத் தன் கண்களைத்திறந்து, அப்பாலர்களை நோக்கிப் புன்சிரிப்பொன்று சொரிந்துவிட்டு மீண்டும்தூங்கலாயிற்று. அப்போது அப்பாலர்களின் இளமனமோ ஆனந்தவெள்ளத்தால் மூழ்கியது.

சொற்பநேரத்திற்குள் தான்சமைத்த காலைஉணவை றெபெக்கா பிரயாணிகள் முன்வைத்து அதனைஉண்ண அவர்களை அழைத்தாள். அதிகம்ஒன்றுமில்லை. கோதுமைரொட்டி, தேன், பழம், ஆட்டுப்பால். ஏழைகளின்உணவு. எல்லோரும்ஒன்றாகச் சாப்பிட்டானதும், மரியாளைத் தூங்கும்படிசொல்லி, றெபெக்கா தனது இருகுழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வெளியேசெல்ல எத்தனித்தாள். ஆனால், சாதாரணமாய் வெகுசப்தமிட்டு விளையாடிக்கொண்டிருக்கும் அக்குழந்தைகள் அன்று மிகஅடக்கவொடுக்கத்துடன் இருப்பதைக்கண்ட றெபெக்கா ஆச்சரியப்பட்டாள். மரியாளின் பாலகனை அவர்கள் சதாபார்த்துக்கொண்டே இருப்பதையும், அதை விட்டுப்பிரிய மனமில்லாதவர்களைப்போல அக்குழந்தையைச் சுற்றிச்சுற்றி அவர்கள்வருவதையுங்கண்டு, அவர்களை வீட்டிலேயே விட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு நூல்நூற்கத்தொடங்கினாள். சீமோனும், சூசையப்பரும் அத்திமரத்தடியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

மீண்டுமொருமுறை மரியாளின்பாலகன் விழித்து அச்சிறுகுழந்தைகளைப் பார்த்துப் புன்னகைகொண்டது. அத்தருணம் ஏதோஓர்புத்துணர்ச்சி அத்தச்சிறுவர்கள்மனதில் தோன்றியது. அப்பாலகன் வசம் அவர்களின்இளமனது இழுக்கப்பட்டது. பலவருடங்களுக்குப் பிறகுதான் அப்பாலகன் வசம் என்னகவர்ச்சி இருந்ததென்று அவர்கள் அறிந்தார்கள். அக்குழந்தை தேவபாலனென்று அறிந்தார்கள. அப்பாலகன் பெரியவராகி யூதேயா, கலிலேயாநாடுகளில் சுற்றித்திரிந்தபோது, அவரைப்பின்பற்றத் தங்கள்பாலியபருவத்தில் தாங்கள் அவர்வசமானதைப்போல், மற்றக்குழந்தைகளும் அவரிடம் ஓடிச்செல்வதைக் கண்டார்கள்.

பலமணி நேரமாயிற்று. தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்துநடத்த வேண்டுமென்று சூசையப்பரும், மரியம்மாளும்சொன்னார்கள். சீமோனோ: "சூசையப்பரே! உங்களுடையபிரயாணம மிகநீண்டது, சிரமமானது; உமதுமனைவியோ அதிகபலவீனமாய் இருக்கிறாள்; இன்றிரவுதங்கி, நாளை போங்கள்" என்றார். சூசையப்பர் இதைக்கேட்டுச் சந்தோஷங்கொண்டார். என்றாலும், "என்நண்பனே! உன்வீடுமெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டது; ஆனால், நான் தாமதிக்கமுடியாது; போகவேண்டும்" என்றுபதிலுரைத்தார்.

"சரி, கடவுள்நாமத்தினால் போங்கள்; ஆனால், மற்றுமொருமுறை நீங்கள்வருவதாக வாக்குக்கொடுக்க வேண்டும்" என்றார் சீமோன்.

"சரிஅப்படியே" என்று பகர்ந்தார் சூசையப்பர். சீமோன் சந்தோஷமுகத்துடன் வெளியிற்சென்று, சில நிமிஷங்களுக்குப்பிறகு கவலைமிக்கவதனத்துடன் உள்ளே நுழைந்தார். இதைக்கண்ட சூசையப்பரும், மரியாளும் கலக்கமுற்றார்கள். அப்போது சீமோன்: "அம்மணி, உங்கள்பயணத்திற்கென்று சிலபழங்களைக் கொடுக்கலாமென அத்திமரத்தைப் போய்ப் பார்த்தேன்; ஒருபழங்கூட இல்லை; ஏனோ, நன்றாகக்காய்த்தமரம் ஒருவருடமாய்ப் பழங்கொடுப்பதில்லை; இச்சிறுபிள்ளைகளும் ஏங்கிப் போகிறார்கள்" என்றார்.

"அதற்கென்ன உமது தாராளமனதே எங்களுக்குப் போதுமானது; இச்சிறு குழந்தைகள்இரண்டும் இனிஏங்காமலிருக்கக் கடவுள் உங்களைஆசீர்வதிப்பார்" என்று மரியாள்சொல்ல, அவளுடையபாலகன் அங்கிருந்த எல்லாரையும்பார்த்துப் புன்னகைகொண்டது. மரியம்மாளின பார்வையும், சூசையப்பரின்பார்வையும் அத்திமரத்தின்மேல் சென்றன. மரியாள் இருகுழந்தைகளையும் வாரியெடுத்து அன்போடுமுத்தமிட்டு, விடைபெற்றுவெளியேறினாள். சூசையப்பரும் கழுதையைஅவிழ்த்து, அதன்மேல் மரியாளை உட்காரவைத்துச் சீமோனிடம் விடைபெற்றுப் பிரயாணமானார்.

இமைகொட்டாத கண்களுடன் சீமோன்குடும்பத்தார் வழிப்போக்கரை அவர்கள்மறையும்வரையில் வெகுநேரம் பார்த்துக்கொண்டிருந்தனர். திடீரென்று அவர்கள்பார்வை அத்திமரத்தின்மேல்விழவே, ஆச்சரியம்! அந்த அத்திமரம்நிறையப் பழுத்தபழங்கள் இருக்கக்கண்டனர். பழங்களின் எண்ணிக்கையாலும், பருமனாலும் கிளைகள் ஒடிந்துவிடும்போல்தோன்றின. பிள்ளைகள் இருவரும்ஓடி மரத்தினடியிற் குதித்துக் குதித்துச் சந்தோஷங் கொண்டாடினர். சற்றுநேரத்திற்குப் பிறகு பக்கத்திலிருந்த மற்றக்குடிசைகளுக்குஞ் சென்று, அங்கிருந்தபிள்ளைகளை அழைத்துவந்து, குலுங்கக்குலுங்கப் பழங்கள்தொங்கிய மரத்தைக் காட்டி, அவர்களோடுசேர்ந்து ஆடிப்பாடிமகிழ்ந்து, மரத்திலேறிப் பழங்களைப்பறித்துப் பிள்ளைகளின் சட்டைப் பைகளை நிறைப்பிஅனுப்பினர். இதுவே முதற்கிறிஸ்மஸ் விருட்சத்தின் வரலாறு.

(ச. வி.)

## அறிவுச் சுடர்

❋ திருப்பாலகயேசு எங்கேபிறந்தார்?

சுண்ணாம்புக் கற்குகைஒன்றில் பிறந்தார். இந்தக்குகை மிருகங்கள்ஒதுங்கும் இடமாகப் பாவிக்கப்பட்டுவந்தது. ஓர்மாட்டுத்தொட்டிலேயும் அதுகொண்டிருந்தது.

❋ திவ்வியயேசு பிறந்தஇடத்தைப் பாதுகாத்து வந்தவர்கள் யார்?

கிறீஸ்துவர்களை விரோதித்த அஞ்ஞானஉரோமர்களே. இவர்கள் அந்த இடத்தைத் தங்கள் தேவதைகளுள் ஒன்றின் சேத்திரமாக ஆக்கிவிட்டார்கள்.

❋ தேவபாலன் பிறந்தஇடத்திற்கு மேலாக எந்த உரோமைச்சக்கிரவர்த்தி ஆலயம்ஒன்றைக் கட்டியெழுப்பினார்?

கொன்ஸ்ரன்ரீன் சக்கிரவர்த்தியே.

❋ பார்சிகர் பலஸ்தீனாமீது படையெடுத்து அதனைப்பாழாக்கியபோது பெத்லகேம்ஆலயத்துக்கு யாதாமோர் தீங்குஞ்செய்யாது விட்டுப்போனதேன்?

ஏனெனில், அவாகள் கீழ்த்திசையிலிருந்துபோய்த் தேவபாலனைத்தரிசித்த மூவரசர்களில் ஒருவரான தங்கள்அரசரின் உருவங்களும் அவ்வாலயச்சுவர்களில் இருக்கக்கண்டு ஒப்புக்கொண்டமையேயாகும்.

❋ ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலே தற்போது எத்தனைநாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன?

சமீபத்தில் இலங்கைஉட்படப் 16 நாடுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டதோடு அதிலே தற்போது எல்லாமாக 76 நாடுகள் அங்கம்வகிக்கின்றன. இதற்குமுன் 60 நாடுகளே அங்கத்துவம் வகித்திருந்தன.

❋ உலகில் அதிகதூரம்நீந்திப் பிரசித்திபெற்றவர் யார்?

ஐக்கிய அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த திரு. ஜோண் வி. சிக்மன்ட் என்பவரே. இவர் மிசிசிப்பிஆற்றிலே சென் லூயிஸ்நகரிலிருந்து கறாதேர்ஸ்வில்எனும் இடம்வரையிலுள்ள 292 மைல்தூரத்தையும் 1940-ம் ஆண்டு ஆடிமாதம் 29-ந்திகதியன்று 84மணித்தியாலம் 48 நிமிஷத்தில் நீந்திமுடித்துப் பிரசித்திபெற்றார்.

❋ சுவிசேஷத்திற் சொல்லப்பட்டுள்ள மூன்று ஏரோதுகளில் மாசில்லாதகுழந்தைகளைக் கொலைசெய்வித்தவன் யார்? ஸ்நாபக அருளப்பரின் சிரசைக் கொய்வித்தவன் யார்? அர்ச். யாகப்பரைக் கொல்லுவித்தவன் யார்?

மாசில்லாத குழந்தைகளைக் கொலைசெய்வித்தவன் பெரியஏரோதன். ஸ்நாபக அருளப்பரைச் சிரங் கொய்வித்தவன் அந்திப்பாஸ் ஏரோதன். அர்ச். யாகப்பரைக் கொல்லுவித்தவன் அகிறிப்பா ஏரோதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரின் நடுச்சாமப்பூசை

பரிசுத்தபாப்பரசர் வத்திக்கானிலுள்ள தமதுபிரத்தியேக சிற்றாலயத்தில் கிறிஸ்மஸ் நடுச்சாமப்பூசை நிறைவேற்றிய போது அநேகநாடுகளைச்சேர்ந்த கோடிக்கணக்கானமக்கள் வானொலிமூலம் அவரது குரற்தொனியைக் கேட்டுநின்றார்கள். இந்தப்பூசைக்கு உதவிசெய்தவர் வத்திக்கான இராச்சியபதில் மந்திரியாரான மொன்சிஞ்ஞோர் தார்தினி சுவாமிகளே. அவ்வேளை சமுகமாயிருந்தோர் மூவர்மாத்திரமே. வத்திக்கான் வானொலிநிலையத்தைச் சேர்ந்த வண. அந்தோனி ஸ்ரிபானிஸி சுவாமியாரும், வண. பிரான்சிஸ் பெலிகிறினேசுவாமியாரும், பிரதிமைப்படம் பிடிப்பவர்ஒருவருமே அம்மூவராவர். பலிபீடம் வெண் மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

### நான்குபுதல்விகளும் தாயும்

ஸ்பானிய உள்நாட்டுயுத்தம் நிகழ்ந்தபோது, 83 வயதுடைய ஓர்விருத்தாப்பியமாது கன்னியாஸ்திரீமாரான தனது நான்கு புத்திரிகளும் கொலைசெய்யப்படுவதைக் காணுமாறு கம்யூனிஸ்த படுபாதகர்களாலே பலவந்தஞ் செய்யப்பெற்றாள். அப்போது இந்தமாது வீரத்துவமாக இறக்கும்படி அவர்களை உற்சாகப் படுத்திநின்றாள். பிந்தஇவளுமே அந்தக்குரூரபாதகர்களால் கொலைசெய்யப்பட்டாள். இத்தாயும் ஸ்பானிய கத்தோலிக்கசேவாசங்க அங்கத்தவர்களான 19 ஸ்திரீ அங்கத்தவர்களுள் ஒருத்தியாவள். இந்தப் 19 பேருக்கும் முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டுவிப்பதற்கான மேற்றிராசனவிசாரணை ஆரம்பமாகியிருக்கிறது. இந்தப் 19பேருள் மற்றோர்பெண் கிறீஸ்து இராசாவை வாழ்த்திக்கொண்டிருந்ததைத் தடுப்பதற்காக அவளுடையநாவை வெட்டிவிட்டார்கள். மற்றோர்பெண் உயிருடன் புதைக்கப்பட்டாள். இந்தப் 19 பேரும் ஸ்பெயினிலே வலென்சியா மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

### மற்றோர் விசுவாசசத்தியம்

பரிசுத்ததேவதாயார் "சகல வரப்பிரசாதங்களினதும் மத்தியஸ்தி" என்பதைப் பாப்பரசர் விசுவாசசத்தியமாக எதிர்காலத்தில் பிரகடனஞ் செய்வாரென எதிர்பார்க்கப்படுவதாய்ப் பத்திரிகைச்செய்திஒன்று வெளிவந்திருக்கிறது. பாப்பரசரது ஆஞ்ஞையின்பேரிலே சுமார்15ஆண்டுகளாக வேதவிற்பன்னர்களின் கம்மிஷன்கள் இவ்விஷயமாய் ஆலோசனைசெய்து வந்தபோதிலும் இதுபற்றி விரைவிலே முடிவுசெய்யப்படுமென்று அதிகாரபூர்வமாக யாதொன்றுமே வெளியிடப்படவில்லை.

### இடைச்சிகள்சபைக் கன்னியர்

இத்தாலியிலே 1946-ம்ஆண்டு அடியிடப்பெற்ற இடைச்சிகள் கன்னிகா சபையைச்சேர்ந்த மூன்று கன்னியாஸ்திரிமார் ஆஸ்திறேலியாவிற்குச் சென்று அங்குமெல்போண் நகரிலே அந்நாட்டில் தங்கள்முதலாவது மடத்தைத்திறந்திருக்கின்றனர். இவர்கள் விசாரணைப்பங்குக்குருவானவராலே தங்களுக்குக் கொடுபடும் எந்தப்பணியையும் ஏற்று விசாரணைப்பங்குகள் தோறுஞ்சென்று செய்துவருவார்கள். இவர்கள்சபை றோமாபுரியிலே வண. எச். அல்பீரியன் சுவாமியாரால் அடியிடப்பெற்றுத் தனதுதாய்மடத்தை அல்பானோவில் கொண்டிருக்கிறது. ஏற்கனவேஇதில் 400 கன்னியாஸ்திரிமாருக்குமேல் இருந்து வருகின்றனர்.

### கருதினல்மாரின் கிறிஸ்மஸ் வாழ்த்து

1954-ம் ஆண்டின் மார்கழி மாதத்திலே தாம் சீவாபயத்துக்குரிய நோய்கண்டிருந்தபோது இறந்தோமில்லையேயென்று பரிசுத்தபாப்பரசர் கிலேசம் தெரிவித்துக் கொண்டதாக அன்று சனிக்கிழமை கருதினல்மார் திருச்சங்கதலைவரான கருதினல் திசரன் ஆண்டவர் கூறியுள்ளனர். இவர் கருதினல்மார் திருச்சங்கத்தின் கிறிஸ்மஸ்வாழ்த்துகளைப் பரிசுத்தபாப்பரசருக்குச் சமர்ப்பித்தபோது, இற்றைக்கு ஓர்ஆண்டின்முன் இருந்த நிலைமையையும், இந்தக் கிறிஸ்மஸ் விழாவின்போது அவர் நல்ல சுகத்துடன் இருப்பதையும் ஒப்பிட்டுப் பேசியபோது: "அம்மாதத் தொடக்கத்திலே (1954 மார்கழி) வத்திக்கானில் ஞான அப்பியாசங்கள்போதிக்கப்பட்டு வருகையில் பரிசுத்த பிதாவாகியதாங்கள் தியானத்திலும், செபத்திலுமிருந்து தங்கள்பிராணனை உதாரகுணத்துடன் பலியாக ஒப்புக்கொடுத்தீர்கள்; மரியன்னையின் வருடத்திலே, தாங்கள் அத்துணை தயாராயிருந்த ஓர்வேளையிலே தாங்கள் அழைக்கப்பட வில்லையேயென்று முதலாவது கருதினல்தியாக்கோனுக்கும், எனக்கும் மார்கழிமாதம் 4-ந்திகதியன்று காலை கிலேசம் தெரிவித்தீர்கள்; இன்று மகா பரிசுத்தபிதாவே, தாங்கள் அத்துணை வயது சென்றவராயிருந்தும் எப்போதிருந்ததிலும்பார்க்க அதிகம் சுகமுடையவராயிருப்பதையும், தங்கள் பாரமானகடமைகளைத் தைரியத்தோடும், பலத்தோடும் கொண்டுநடத்துவதையும்கண்டு நாம் ஆனந்தங் கொள்ளுகிறோம்" எனக் கூறினின்றார்.

### பிரதமசேனபதியும் கம்யூனிஸமும்

மத்தியஐரோப்பாவிலே நேசநாடுகளின் ஆகாயப்படைகள் பிரான்சில் பொன்ரேன்புளோ நகரில் பிரதமதலைமைஸ்தானத்தைக் கொண்டிருக்கின்றன. வடஅத்திலாந்திக் உடன்படிக்கை ஸ்தாபனத்து மிகப்பாரிய ஆகாயப்படையின்— அதாவது நேசநாடுகளின் மத்தியஆகாயப் பலத்தின் பிரதமதளபதியான ஏயர் சீவ்மாஷல் சேர் பேசில் எம்பிறை அவர்கள் முன்சொன்ன பிரதமதலைமைஸ்தானத்தில் ஓர்கத்தோலிக்க சிற்றாலயத்தைக்கட்டிச்சமீபத்திலே சங்மானிக்கலாயினர். அத்தருணம் 150கத்தோலிக்க பட்டாள அதிகாரிகள் அதில்சமுகமாயிருந்து, அதிகாலைப்பூசைகண்டு திவ்வியநன்மை பெற்றுக் கொண்டார்கள். பிரித்தானி, கனடா, ஐக்கிய அமெரிக்க தேசம், பிரான்ஸ், பெல்ஜியம், ஒல்லாந்துமுதலாம் நாடுகளின் பிரதிநிதிகளாக வந்திருந்த இந்தஅதிகாரிகளின் தேசியக் கொடிகள் முன்பாகநின்று சேர் பேசில் எம்பிறைஅவர்கள் பேசியதுவருமாறு: "கம்யூனிஸம்என்பது ஓர் மனநோயும், ஆத்துமகான்சர்— அதாவது புற்றுநோயுமாகும். கத்தோலிக்கரென்றமட்டிலே அதனை எதிர்த்துப்போராடுவது நம்முடையகடமையாகும். கத்தோலிக்கராகிய நாம்— கோடிக்கணக்கிலே உலகமுழுவதிலுமுள்ள நாமெல்லாம் — காண்பிக்கவேண்டிய முன்மாதிரிகையை உள்ளபடியே காணபித்தால் இந்தத்தீமைகளிலிருந்து நீங்கி விடுதலையடைவதில் பிரமாண்டமான முன்னேற்றத்தை அடைந்துகொண்டு வருவோம்."

### வண. ஹெறஸ் சுவாமிகள்

பிரபல சரித்திரஆராய்ச்சிவல்லுனரும், பம்பாய் அர்ச். சவேரியார்கல்லூரியில் சரித்திராசிரியராய் இருந்தவருமான வண. ஹெறஸ்சுவாமிகள் அங்கே 14-12-55 புதன்கிழமை தமது 67-வதுவயதில் மரணமாயினர். இவர் இந்திய, ஐரோப்பிய பாஷைகளாய்ப் 16 பாஷைகளைப் பேசவும், எழுதவும்அறிந்தவர். இவர் மரணமடைந்தாரென்ற செய்திகேட்டு வருந்திய பல்வேறு அறிஞர்களுள் ஒருவரான டக்றர் மா. இராசமாணிக்கனர் பத்திரிகைநிருபர்களிடம் கூறியதாவது: "இப்பெரியார் ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்தவர். எம். ஏ. பட்டம்பெற்றவர். இளமைமுதலே புதைபொருள் ஆராய்ச்சியில் மிக்கஈடுபாடு கொண்டவர். இவர் பலமேனாட்டுப் பாஷைகளையும், இந்திய பாஷைகளையும் அறிந்தவர். காய்தல், உவத்தலின்றி நடுநிலை ஆராய்ச்சியில் மனம்கொண்டவர். சிந்துவெளிஆராய்ச்சியில் ஊக்கம்கொண்டவர். மொஹெஞ்சோதரோ, ஹரப்பாஎன்னும் புதைபொருள் ஆராய்ச்சிக்குரிய இடங்களை நேரிற்சென்று ஆராய்ந்து பலகட்டுரைகளும், நூல்களும்எழுதியவர். சிந்துவெளிமக்கள் திராவிடரேஎன்பது இவர்கொண்ட முடிவாகும். பல்லவா வரலாற்றையும் ஆராய்ந்து இவர் ஒருநூல்எழுதியுள்ளார். சிலஆண்டுகளுக்கு முன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சேர் வில்லியம்மேயர் சொற்பொழிவுகளின் சார்பாக ஆறு சொற்பொழிவுகள் ஆற்றி, அவற்றிற்குரிய 1,500ரூபா பரிசிலைப்பெற்றவர். சிந்துவெளி நாகரிகம் திராவிட மக்களுடையது என்பதைத் தமதுஆராய்ச்சியால் உலகு அறியச்செய்தபெருமை இவ்வாராய்ச்சிப் பேரறிஞரையேசாரும். இவரதுமறைவு பொதுவாக ஆராய்ச்சிஉலகிறகும், சிறப்பாக தமிழகத்துக்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்."

### பிறந்தபெருநாள் அன்பளிப்பு

பொற்சித்திரத் தையல் வேலைப்பாடுகொண்டு அலங்கரிக்கப்பெற்ற 1956-ம்ஆண்டுக்குரிய பஞ்சாஙகம்ஒன்றைச் சமீபத்திலே பரிசுத்தபாப்பரசர் அன்பளிப்பாகப் பெற்றிருக்கின்றார். அதிலே அவரின்பிறந்த பெருநாள் — பங்குனி 2 — விசேஷவிதமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. றோமைநகரிலே கருதினல்மாரின திருச்சடங்குகளுக்குரிய அஙகிகளைச்செய்கின்ற ஓர்கம்பெனியே இந்தஅன்பளிப்பைச் செய்யலாயிற்று. நீண்டகால பாரம்பரியப்படி, அந்தக்கம்பெனியின் மூன்றுபிரதமஅங்கத்தவர்களால்அதுகொண்டுசென்று அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அது தேவதாயாரின் அழகியபடமொன்றையும், பாப்பரசின் சின்னங்களையும் அடக்கியிருந்தது.

### மனந்திரும்பிய பாதிரியார்

கடந்த 24 வருடங்களாக ஓர் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராயிருந்த கனம். செசில் றென்ஷோ அவர்கள் மனந்திரும்பி இங்கிலாந்திலே பிறென்ஷாம் நகரில் தாம்இப்போது ஆசிரியராயிருக்கின்ற தோமஸ்மோர் கலாசாலையிலே அன்று சனிக்கிழமை வண. ஜே ஆர். பி. சிமித்சுவாமியாரால் (முன்னர் இவரும் ஓர்அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராயிருந்து மனந்திரும்பியவர்) கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப் பெற்றிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைமாதம்

**போதுக் கருத்து:** மெய்யான திருச்சபையைத் தேடுகிறவர்கள் பாப்பானவரின் தலைமையே திருச்சபையின் ஐக்கியத்திற்கு அத்திபாரம் என்பதைக் கண்டுணரும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** சீனக்கத்தோலிக்கமக்கள் தங்களுள் ஒற்றுமையாய், திருச்சபையோடு இணைபிரியாதவிதமாய்ச் சேர்ந்திருக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
தைமாதம் 12-ந் திகதி

## மொழிப்பிரச்சினை

மொழிப்பிரச்சினை என்பது இன்று தமிழ்மக்களின் — தமிழ்ப் பேசும்மக்களின் ஐக்கியத்தைத் தெளிவுபடுத்தும் ஓர்உரைகல்லாகிவிட்டது. இப்பிரச்சினை சம்பந்தமாய் அவர்கள் ஒன்றுபட்டு ஒரேமுகமாய் — ஒரே பந்துக்கட்டாய் நிற்கின்றார்களா? அன்றேல் தம்முள் இரண்டுபட்டுத் 'தான்பிடித்தமுயலுக்குக் கால் மூன்றே'யென்றவாறாய்ப்பிடிவாதஞ்செய்து பலமுகமாகப் பிளவுபட்டு நிற்கின்றார்களா? என்பதைக் கருத்தாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஏற்கனவே பலகட்சிகளாகப் பிரிந்துள்ளவர்களை ஐக்கிய முன்னணிக்குக் கொண்டுவருவதற்குப்பதில் அது ஐக்கியமற்ற ஓர்பின்னணிக்குக் கொண்டுவருவதாகவே நன்கு புலப்படுகிறது. மொழிப்பிரச்சினைகள்போலும் பொதுப்பிரச்சினைகள் எழும்போது தமிழர்களும், தமிழ்ப்பேசும்மக்களும் "ஒன்றுபட்டால்உண்டுவாழ்வு" என்ற உயரிய சுலோகத்தை உளத்திற்கொண்டு மதிநுட்பமாய், அமைதியாய்ச் செயலாற்ற வேண்டியது அத்தியாவசியமாகும். இதனால்நாமும் ஈண்டு மொழிப்பிரச்சினையில்தான இறங்குகிறோமென்று எவருமே சிந்திக்கவேண்டியதில்லை. ஆனால், இந்தமொழிப்பிரச்சினை சம்பந்தமாகப் பேசும்போதெல்லாம் எழுந்தமானமாகக் கண்டகண்டபடியே எதையும்பேசாது, ஆராய்வாகச் சிந்தித்து — ஆழ்ந்துசிந்தித்துப்பேசவேண்டுமென்று கேட்குமுகமாகவே ஈண்டுநாமஎழுத முன்வந்துள்ளோம். தமிழ்த்தலைவர்களும், மாபெருங்கூட்டங்களில் பேசத்தலைப்படுகிறவர்களும் ஒருவரையொருவர் தாக்கிப்பேசுவதாலும், ஒருவர்க்கொருவர் சவால் விடுப்பதாலும், பெரும்பான்மைச் சிங்களசாகியத்தினரை இழுத்துப்பேசுவதாலும் தமிழ்மக்களுக்கும், தமிழ்மக்களுக்கும் — தமிழ்மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையே பிளவுக்கு மேல்பிளவும், குரோதத்துக்கு மேல்குரோதமும், ஏச்சுக்கு மேல்ஏச்சும், பேச்சுக்கு மேல் பேச்சும் வளர்ந்துகொண்டு வருமேயல்லாது பிறிதோர்நன்மையும்வரப்போவதேயில்லை. தமிழர்கள் சிங்களரை எதிர்த்துக் ஹார்த்தால் நடத்தவேண்டுமென்று இங்கே ஒருதமிழர் கூறியதும், யாழ்ப்பாணப் புகையிலைச்சுருட்டை எதிர்த்துக் ஹார்த்தால் நடத்துவதாக அங்கே ஒருசிங்களவர் கூறியிருப்பதைச் சிந்திக்கவேண்டும். தமிழரின்உரிமைகள் மறுக்கப்பட்டால் ஒருநாள்உண்ணாவிரதம் அனுட்டிக்கவேண்டுமெனக் கூறுவதால் — அப்படியே ஓர் நாள் உண்ணாவிரதம் அனுட்டிப்பதால் தமிழரின்உரிமைகள் திரும்ப அளிக்கப்படுமா? என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இவைபோலும் விழற்பேச்சுகள் எதில்போய் முடியுமென்பதை ஆராய்வாகச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். மொழிப்பிரச்சினை விஷயமாய்த் தமிழரும்தமிழரும் தங்களிடையே பிணக்குப்பட்டுக்கொண்டும், வாக்குவாதப்பட்டுக் கொண்டுமிருந்தால் ஈற்றில் ஆட்டுக்கடாச்சண்டையிலே நரி இரத்தங்குடித்த வாறாகத்தான் கருமம்முடியுமென்பதைக் கருத்தாகச் சிந்திக்கவேண்டும். அங்ஙனம் சிந்தித்து அமைதியாகவும், ஐக்கியமாகவும் நடந்துகொள்ளாவிடின் என்ன நடக்கும்? மொழிப்பிரச்சினையே ஈற்றில் பெருஞ்சிக்கலான பிரச்சினைகளை உண்டுபண்ண ஏதுவாகும்.

## பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதி

இந்தியாவிலே வத்திக்கானின் அப்போஸ்தலிக்க ஸ்தானிகரும், இலங்கைக்குப் பரிசுத்த பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியுமான மகாமேன்மைதங்கிய எம். எச். லூக்காஸ் ஆண்டவர் அவர்கள் தமது காரியதரிசியான வண. ஈ. கலிடிசுவாமியவர்கள் சமேதராய் அதிகாரபூர்வமாக இலங்கைக்கு விஜயஞ்செய்திருக்கின்றார். அவர் நேற்றுப் புதன் கிழமைகாலை 6 மணிக்கு 'எஸ். எஸ். ஸ்ருத்மோர்' எனுங் கப்பலிலே கொழும்புத் துறைமுகம் வந்துசேர்ந்து, பின்னர் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த துறைமுக ஜெற்றியில் 8-30 மணிக்கு இறங்கியபோது, கொழும்பு அதிமேற்றிராணியாரும், இலங்கையின் ஏனையமேற்றிராணிமார்களும், அநேக குருப்பிரசாதிகளும், பேராசிரியர் டபிள்யு. ஏ. ஈ. கருணரத்ன அவர்களைத் தலைமையாகக் கொண்ட பெருந்திரளான கத்தோலிக்கமக்களும் குதூகலத்துடன் அவரைவரவேற்றுநின்றார்கள். அவ்வேளை ஸ்தானாபதிஆண்டவர் பேசியபோது: "நம்மைவரவேற்பதற்காக அத்துணைநேரகாலத்துடன் இங்கு வந்த உங்கள்எல்லோருக்கும் நாம் பெரிதும் மகிழ்ச்சியுடன் நன்றிகூறுகின்றோம்; நம்மைச் சந்திப்பதற்காக வந்தவர்கள் அநேகமாகக்காலைப்போசனஞ் செய்யாதிருப்பதால் நாம் நீண்டதோர்சொற்பொழிவு நிகழ்த்தப் போவதில்லை"யெனக் கூறினின்றார். அதன்மேல் பெரியஊர்வலமாக அவர் பொறளையிலுள்ள அதிமேற்றிராணியாரின் மாளிகைக்கு அழைத்துச்செல்லப் பெற்றார். ஸ்தானாபதியாண்டவர் இருமாசகாலம் இலங்கையிற் தங்கி இங்குள்ள பலமேற்றிராசனங்களுக்கும் விஜயஞ்செய்வாரென அறிகின்றோம்.




## சதாசகாயமாதா கோணம்

### சகாயமாதாவின் உதவியால் ....

அமெரிக்கதேசத்திலே தென்கரோலினா மாகாணத்திலே, டில்லோன் எனும் பட்டினத்திலே, வறியோரது சின்னக் கன்னியாஸ்திரிமாரின் பராமரிப்பிலே ஓர்வைத்தியசாலை மிக்கபிரபலியமாக நடாத்தப்பட்டு வருகிறது. பலவிதநோயாளிகளும் சாதிசமய பேதமில்லாது அங்கே சிகிச்சைபெறுகின்றார்கள். சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தால் அங்குபலரும் அடைந்துகொள்ளும் ஆன்ம, சரீர நன்மைகளோ அனந்தம். தேவதாயாராது பக்தர்களின் பக்திஅருட்சிக்காகவும், அவவை இன்னுமே அறியாது, அவவின்உதவியை நாடித்தேடாது, ஆரிடஞ் செல்வோமென அங்கலாய்த்துத்திரியும் ஆபலைகள் அவவையும், அவவுடைய திருக்குமாரனையும் அடைய வழியாகவும், பாவிகளின் அடைக்கலமும், தஞ்சமுமானவ தேவதாயார்என்பதைக் காண்பிக்கவும் அங்குநிகழ்ந்தசம்பவங்களில் ஒன்று கன்னியாஸ்திரிகளில்ஒருவர் கூறியபடி கீழே தரப்படுகின்றது.

"இந்தநோயாளி பலதடவைகளில் சிகிச்சைபெறும்நோக்கமாக எங்கள் ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கிறார். இவர் இருதயநோயாற் பீடிக்கப்பட்டிருந்தார். இவருடைய சமயம் என்னவென்று கேட்கும்போது, ஒவ்வொருமுறையும் "எனக்குச் சமயமேஇல்லை" என்று அவர்சொல்வது எனக்கு ஆச்சரியமாகத்தான் தோன்றிற்று. இவர் மட்டில் நாங்கள் எங்களை அறியாமலே விசேஷகருணை காட்டிவந்தோம். இவர் மூன்றாம்முறையாக ஆஸ்பத்திரிக்கு வந்தபோது இவருடைய சரீரஆரோக்கியத்துக்குத் தேவையான சிகிச்சை செய்துகொண்டு, பலதும்பத்தும் கதைத்துக்கொண்டிருந்தபோது சம்பாஷணை ஞானகாரியங்கட்கடுத்த விஷயங்களிலுந் தாவிவிட்டது. அப்போது அவர் தான் ஒருகத்தோலிக்கனென்றும, ஆனால், கடந்த 37 வருடங்களாகச் சமயானுசாரம் என்பது என்னவெனத் தனக்குத் தெரியாதென்றும், தன்பெண்சாதிபிள்ளைகள், இனசனர் எல்லோரும் கத்தோலிக்கசமயத்தை முற்றாய்த் துவேஷிப்பவர்களென்றும், இந்தநிலைமையிலே தான் மனமாற்றம் அடைவதும, வேதத்தை அனுசரிப்பதும, தேவனோடு சமாதானமாவதும் பகற்கனவாகுமென்றும் கூறினார். அவர்மட்டில் எங்கட்குண்டான பரிதாபத்தை என்னென்றுசொல்வது? என்றாலும் அவருக்காக நாங்கள் மன்றாடுவோமென்றுசொல்லி, சதாசகாயமாதாவிடத்தில் நம்பிக்கை வைத்து மன்றாடும்படி அவரையும் பரிவாய்க் கேட்டுக்கொண்டோம்.

அவர் திரும்பவும் இரண்டுமூன்று முறைஆஸ்பத்திரிக்குவந்தார். சிகிச்சைபெற்றார். குருவானவரைக் காணமுதலாய்ச் சம்மதியாதிருந்த அவர் மனத்தைரியமடைந்து குருவானவரோடு சம்பாஷிக்க மனமிசைந்தார். அவர் கடைசிமுறையாக ஆஸ்பத்திரிக்குவந்தது சென்ற தபசுகாலத்திலாகும. அவரின சுகம வெகுதிருப்திகரமாகத் திருத்தமடைந்துகொண்டு வந்தது. அவர் பாவசங்கீர்த்தனஞ்செய்து குருத்தோலை ஞாயிறன்றுகாலை 37 நீண்டவருடங்களின்பின் திவ்விய சற்பிரசாதம உட்கொள்ளும் பாக்கியம் பெற்றார். சிற்றாலயத்தில்நடைபெற்ற பரிசுத்தவாரத் திருச்சடங்குகளிற் பங்குபற்றினார். உயிர்த்தஞாயிறன்று திவ்வியபூசைகண்டு திருவிருந்தருந்தினார். அதன்பின் அடிக்கடி தேவநற்கருணைபெற்றார். எங்களோடுசேர்ந்து திருச்செபமாலையும் ஓதிவந்தார்.

"சதாசகாயமாதாவின் உதவியால் நான் என்னுடனும, தேவனுடனும் சமாதானமாய் இருக்கிறேன. நான் மனச்சந்தோஷ மடைந்திருக்கிறேன். தேவதாயாரின் உதவிசகாயம் இல்லாமல் நான ஒருபோதும் இந்தநிலைமை அடைந்திருக்க மாட்டேன் சிஸ்றர்" என்று பலதடவைகளில் என்னிடம் அவர் கூறினார்.

அவர் பூரணசுகமடைந்து தனது வீட்டுக்குத் திரும்புவாரென நாம் எண்ணியிருந்தோம். ஆனால், திடீரென நோய் கடுமைப்படுத்திச் சிலதினங்களால் அவர் நித்தியவீட்டை அடையச் செய்துவிட்டது. யேசு, மரி, சூசை என்னும் வார்த்தைகளே அவர் கடைசியாகஉச்சரித்த வார்த்தைகளாகும்.

சதாசகாயமாதாவின் இரக்கத்துக்கும், வல்லமைக்கும் வேறுசான்றும் வேண்டுமாமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண மகோற்சவம்

சூராவத்தைவாசரும், கொழும்பு, அருட்சூசைமாமுனிவர் கலைக்கழகப் பேராசிரியருமான ஆசிரியமணி V. A. யோண்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வி திருவளர்செல்வி J. கிறேஸ் அரியநாயகிக்கும், யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார்கலைக்கழக ஆசிரியராகக் கடமையாற்றித் தற்போது இளைப்பாறும் திரு. எஸ். அகஸ்ரீன் தம்பதிகளின் தவப்புதல்வன் திருவளர்செல்வன் A. R. யேசுதாசன் அவர்களுக்கும் எழாலை, அர்ச். இசிதோர் ஆலயத்தில் சென்றமார்கழித்திங்கள் 28-12-55 புதன்கிழமை திருமண மகோற்சவம் விமரிசையாக நடந்தேறியது.

அன்றுகாலை 7 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட மோட்டோர்ரதா ரூடாக மணமக்கள் ஆலயத்தைச்சேரவே, ஆசிரியமணியவர்கள் அவர்களைவரவேற்று அழைத்துச்சென்று பீடத்தின்முன் அமரச்செய்தனர். கட்டளைக்குரவர் வண. அன்ரன் இராசகாரியர்சுவாமிகள் திருமணத் திருச்சடங்கை நிறைவேற்றி மணிகள்ஒலிக்க, வெடிகள்சப்திக்க மாங்கல்யதாரணஞ் செய்வித்தனர். திவ்வியபூசையின்போது சுவாமியவர்கள் ஆங்கிலத்தில் கருத்தாழம் பொதிந்த அழகியபிரசங்கஞ் செய்து மணமக்களை ஆசீர்வதித்தார். பூசையின்பின்னர் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டது. நாவாந்துறைக் கத்தோலிக்க பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. S. தேவசகாயம்தம்பதிகள் மூதன்மாலை சூட்டி மணமக்களைக் கௌரவித்தனர். அவர்களைத்தொடர்ந்து பிரமுகர்கள் பலர் மணமக்களுக்குமாலையணிந்தனர். பின்னர், இரதாரூடாக மணமக்கள் நாதசுரவாத்தியம்முழங்க, இனசனர் புடைசூழ அழைத்துச்செல்லப் பட்டனர். ஆங்காங்கு வீதிகள்வழியே இனசனராலும், பிறராலும் அணியப்பெற்ற மாலைகள் மலைபோற்குவிந்தன. புதிய தம்பதிகள் மனைமன்றல்சேர்ந்ததும் மணமகளின்பெற்றோராகிய திரு. தம்பாப்பிள்ளை யோசெவ்தம்பதிகள் அவர்களைப் பேரன்புபெருக ஆசையோடு வரவேற்றனர். தேசோமயமாகச் சிங்காரிக்கப்பெற்றிருந்த பந்தரின்வாசலை மணமக்கள் அடைந்ததும், ஆசிரியமணி V. A. யோண்பிள்ளை தம்பதிகள் அவர்களைப் பெருநமன்போடு வரவேற்றுத் தங்கக் கணையாளியணிந்து மகிழ்வித்தனர். திரு. R. தேவதாசன் தம்பதிகள் தங்கப்பதக்கமணிந்து கௌரவித்தனர். காங்கேசன்துறைக் கத்தோலிக்கபாடசாலை மாணவர் இனியகீதமிசைத்து வாழ்த்தினர்.

பின்பு ஆசிரியமணியின் அன்பர்களாலே வாழ்த்துப்பத்திரம்படித்துப், பாமாலை சூட்டப்பெற்றனர். வரவேற்புஉபசாரணை சம்பிரமமாக நடந்தேறியது. பரிமேலழகர் S. அருளானந்தம அவர்கள் இலக்கியச்சுவையும், நகைச்சுவையும் கலந்த மணிமொழிகளால் மணமக்களை மனப்பூர்வமாக ஆசீர்வதித்தனர். பண்டிதர் G. J. B. ஆசிநாதன் அவர்களும் அழகிய சொற்பொழிவொன்றாற்றினர். ஈற்றில்மணமகன் நன்றிபெருக்கெடுத்துப் பாயுமுள்ளத்துடன் மணநிகழ்ச்சிகளில் பங்கெடுத்துத் தம்மை மகிழ்வித்த சகலோர்க்கும் இதயபூர்வமான நன்றியுரைகூறினர். நான்காம் தினமாகிய சனிவாரம்பிற்பகல் புதுமணத்தம்பதிகள் மணமகனின் பெற்றோர்இல்லத்திலும் பிரமுகர்கள்பலரும் திரளாகக்கூடியிருந்த சமுகத்திலே மங்கலகரமாக வரவேற்கப்பெற்று, மனோகரமாக உபசரிக்கப்பெற்றனர். அவ்வேளை மணமகன்இல்லத்தில், நடைபெற்ற விருந்துபசாரணையில் பாதுகாவலன் பத்திரிகாசிரியர் பொழிந்தபொன்மழைவாழ்த்துடன் வைபவம்இனிதே நிறைவேறியது.

— M. V.

---

மதிப்புரைகள்

## விவேகானந்தா திருக்குறட் கலண்டர்

யாழ்ப்பாணம், விவேகானந்தா அச்சகமும், புத்தகசாலையும் வழமைபோல அழகாகப் பிரசுரஞ்செய்து வெளியிட்டிருக்கும் "விவேகானந்தா திருக்குறட்கலண்டர்" வரப்பெற்றேம். இதிலே அந்தந்த நாளுக்குரிய ஒவ்வோர் பக்கத்திலும் ஆங்கில, தமிழ், மூஸ்லீம் வருடம், மாதம், திகதிகள் ஆகியன ஆங்கிலம், தமிழ், சிங்களம்எனும் முப்பாஷைகளிலும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. இன்னும அந்தந்தத் திகதியில்வரும் கத்தோலிக்கமக்களின் கடன் திருநாட்களும், மற்றும் பிரதானதிருநாட்களும், யாத்திரைப்பதிகளின் உற்சவநாட்களும், அவ்வாறே மறுசமயத்தவர்களின் உற்சவநாட்களும், பிறவும் மற்றும் அரசாங்க விடுமுறைநாட்கள், அமாவாசை, பௌர்ணை, அட்டமித் தினங்களும், இன்னும் ஒவ்வோர் பக்கத்திலும் பொன்னான ஒவ்வோர் நன்மதியும் தரப்பட்டிருக்கின்றன. வழமைபோல அழகுகுன்றாது விவேகானந்தா அச்சகம் இதனைப் பிரசுரஞ்செய்திருப்பது பாராட்டத்தக்கது. நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

---

## ஈழம்

"ஈழம்" என்னும் மாதஇதழ் அகில இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களின் ஒற்றுமைக்காக உழைக்கும் உயரியநோக்கோடு வெளிவருவதாகும். இதன் மார்கழி இதழ் கிறிஸ்மஸ் மலராக வெளிவந்துள்ளது. மண்ணுயிரை மீட்க மனுவுருவான திவ்வியயேசுவின் திருஅவதாரத்தை விளக்கும் அரியகட்டுரைகள் இரண்டு இம்மலரை அலங்கரித்துநிற்கின்றன. இத்தோடு சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறுகதைகளையும், செஞ்சொற்கவிகளையும் தாங்கிவரும "ஈழம்" தமிழ்ப்பண்பாட்டையும், கலாசாரத்தையும் வளர்க்கும்உதயசூரியனாக என்றும் இலங்கித் துலங்குவதாக. எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

---

## உடலியலும் சுகாதாரமும்

### ஐந்தாம் வகுப்பிற்குரியது

ஆசிரியர்: எஸ். வி. பி. பிள்ளை
கிடைக்குமிடம்: செல்லப்பா அன்ட் சன்ஸ், 323, மெயின்வீதி, கொழும்பு
விலை: சாதாபதிப்பு — ரூபா 1-30
உயர்ந்தபதிப்பு— ,, 1-50

பாடசாலைக்கல்வி மாணவரின் உடல் வளர்ச்சியையும், உளவளர்ச்சியையும், ஆன்மவளர்ச்சியையும், இரசஞான வளர்ச்சியையும், செயற்றிறன்விருத்தியையும் நோக்கமாகக்கொண்டதாகும். இந்நோக்கங்கள்ஐந்தும் நிறைவேறும் போதுதான் ஒருமாணவனதுகல்வி பூரணத்துவமடையும். இவ்வைந்தனுள் தலையாயது உடல்வளர்ச்சி. உடல் வளர்ச்சி சுகவாழ்வையே அடிப்படையாகக்கொண்டது. சுகத்தைப்பேணுவதற்குச் சுகாதாரவிதிகளை அனுசரித்தல்வேண்டும். உடலியல்அறிந்து ஓம்பவேண்டும். இவைகுறித்து 5-ம்வகுப்பு மாணவர் அறியவேண்டிய விஷயங்கள் சரீரமும், அதன்தொழில்களும், பவனம், தண்ணீர், உணவு, சரீரசுத்தம், வீடு, நோய், தொற்றுநோய்பரப்பும் பிராணிகள், நோய்க்கிருமிகள் விருத்தியைத்தடுத்தல், முதல்உதவி, தேகப்பயிற்சி என்ற 11 இயல்களாக வகுத்தும், 28 பாடங்களாக விரித்தும் இந்நூலில்தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. பாடங்கள்ஒவ்வொன்றும் படவிளக்கங்களையும், பயிற்சிவினாக்களையும் அடக்கியுள்ளது. விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்கும்திறமும், மீட்டற்பயிற்சிகளின் அமைப்பும் இந்நூலை மிளிரவைக்கும் இருபெரும் சிறப்புக்களாகும். எனவே, இந்நூல் 5-ம்வகுப்புக்குப் பிள்ளைகளுக்கேற்ற சுகாதாரக் கைந்நூலாகுமென்பதில் எட்டுணையும் ஐயமின்று. எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

---

## சுதேச வர்த்தமானம்

### திரு. சி. எஸ். நாயகம் அவர்கள்

பத்தாவத்தைவாசராய், மலாய்நாட்டிலே கெம்பாஸ்எனுமிடத்தில் ஸ்ரேஷன்மாஸ்றராய் இருந்துவருகிறவரும், தமதுமகளின் திருமண விஷயமாய்ச் சமீபத்திலே யாழ்ப்பாணம் வந்திருந்தவருமான திரு. சி. எஸ். நாயகம்அவர்கள் சென்ற 9-ந் திகதி திங்கட்கிழமை காலை கொழும்பிலிருந்து விமானமார்க்கமாய்த் தமது உத்தியோகதானத்துக்குத் திரும்பியிருக்கிறாரென அறிகின்றோம்.

### மன்னார்ப்பட்டின சங்கம்

நவமாகத் தெரிவுசெய்யப்பெற்ற அங்கத்தவர்களைக்கொண்ட மன்னார்ப்பட்டினசங்கத்தின் முதலாவதுகூட்டம் சென்றதிங்கட்கிழமை நடைபெற்று, அதிலே அப்பட்டினசங்க தலைவராகத் திரு.வி. ஏ. அழகக்கோன் அவர்களும், உபதலைவராக ஜனுப் அப்துல் காஸிம் மரைக்கார் அவர்களும் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார்கள்.

### மன்னார் உப்பளம்

மன்னாரிலே மூடப்பட்டிருந்த உப்பளத்தைக் கடற்தொழிலாளரதுவேண்டுகோளின்பேரிலே மீண்டும் திறந்துவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்பேரிலே வீடமைப்பு—சமூகசேவா மந்திரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் இம்மாதம் 21-ந்திகதி மன்னார்உப்பளத்தை அதிகாரபூர்வமாகத் திறந்துவைப்பாரென அறியக்கிடக்கிறது.

### பிரிவோபசாரம் விரும்பாத டக்றர்

பாணந்துறை அரசினர்ஆஸ்பத்திரியிலே வைத்தியகடமை ஆற்றிவந்த டக்றர் சி. இரத்தினவேல் அவர்கள் கொழும்பிலுள்ள அரசினர்பெரிய ஆஸ்பத்திரிக்குச் சமீபத்திலே மாற்றப்பட்டார். பாணந்துறைப்பட்டினமக்களுக்கு இவர்ஆற்றிய சிறந்தவைத்தியசேவையைச் சிலதினங்களின் முன்னரே பாணந்துறைப் பட்டினசங்கம் வெகுவாகப் புகழ்ந்துபாராட்டியிருந்தது. அதனால்அவருக்கு ஓர்பிரியாவிடைவிழா நடத்துவதற்குப் பலரும்முன்வந்தார்கள். ஆனால், அவர்களின் முயற்சி எதுவும் சரிப்படவில்லை. ஏனெனில், டக்றர் இரத்தினவேல்அவர்கள் எதற்குமமறுத்துவிட்டார். கடைசியாக அவரைநடுவிடமாகவைத்துப் பிரதிமைப்படம்பிடிக்க ஏற்பட்டசெலவை முதலாய் அவரேசெல்லக்கட்டிவிட்டார்.

### களவிலே குடியேறியவர்கள்

மன்னாரிலேஒருவாறு அமர்ந்திருந்த சட்டவிரோத குடியேற்றம் புதுவருடப்பிறப்பைத்தொடர்ந்து மேலும்தலைகாட்டத் தொடங்கியிருக்கிறது. சென்ற 3-ந்திகதிமுதல் மூன்றுதினங்களிலே தென்னிந்தியாவிலிருந்து மன்னார்க்கடற்கரையிலும், தலைமன்னாரிலும், அச்சங்குளத்திலும் சட்டவிரோதமாக வந்திறங்கியமூன்றுகோஷ்டிகளிலுமாக 22 பேர் கைதுசெய்யப் பட்டிருக்கின்றனர். இவர்கள்அனைவரும் சென்ற 6-ந்திகதியன்று தலைமன்னார்க் குவாறன்ரைன் முகாமுக்கு அனுப்பிவைக்கப் பட்டார்கள்.

### பண்டகசாலைத் தீவிபத்து

நம்பட்டணத்திலே கடற்கரைவீதியிலுள்ள கே. துரைசாமி அன்ட் சன்ஸ் பண்டகசாலையில் சென்ற 6-ந் திகதியன்றுபகல் ஓர் தீவிபத்து ஏற்படலாயிற்று. பொலிசரும், ரேகுப்பகுதி ஊழியருஞ்சேர்ந்து தீ பரவாது தடுத்துவிட்டார்கள். பண்டகசாலையில் சேமித்துவைக்கப்பட்டிருந்த கொப்பறாவில் தீப்பற்றியமையே விபத்துஏற்படக் காரணமெனத் தெரியவருகிறது. விபத்தின்போது சிரசில்காயமடைந்தஒருவரைப் பொலிசர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள். யாழ்ப்பாணத்தைப் போலும் ஓர் முக்கியமானநகரில் தீயணைப்புப்படை இல்லாதது ஓர்பெருங்குறையேயாகும். காய்வதற்காகப் பரவிவிடப் பட்டிருந்த கொப்பறாவின் மேலடுக்கில் பற்றிக்கொண்டதீ மேலெழுந்து ஓட்டினால் வேயப்பட்டிருந்த கூரையில் தாவி மரங்களையும், சலாகைகளையும் எரித்துவிட்டது. பலருஞ் சென்று துரிதமாகத் தீயை அணைத்திராது விட்டிருப்பின் அயலிலுள்ள பலகட்டடங்களும் சேதமடைந்திருக்கும். கொப்பறாவின் சொந்தக்காரர்களுக்கு ஒருலட்சம்ரூபாவுக்கு மேற்பட்டநஷ்டம் ஏற்பட்டிருக்குமென நம்பப்படுகிறது.

---

## ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

றோமான் கத்தோலிக்க பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரரின் காரியாலயம் அரசாங்க விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும் என்பதை ஆசிரியர் எல்லோருங் கவனித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

* * *

## ஆசிரியர் தேவை

தலைமன்னார் பியர் றோ. க. **பதியப்படாத** தமிழ்க்கலவன் பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட அல்லது பயிற்றப்படாத தராதரப் பத்திரம்பெற்ற (Trained or Untrained Certificated) ஆசிரியர் ஒருவர் தேவை. விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும்.

Actg. Gen. Manager,
R. C. Schools,
Jaffna, 11-1-56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிலின் அழைப்புக் குரல்

சற்று முன்புதான் பேட்டி முடிந்தது. மனேஜர் தோமஸ் அறையிலிருந்து வெளியேறிவிட்டார். ஆனல், காரியாலயவாயில் வழியை அடையுமுன்னரே அவசர அவசரமாய் அவரைப்பின் தொடர்ந்த சேவகன் அவரிடம் ஓர்சீட்டை நீட்டினன். "பயனில்லை; சுயமனத்திடன் இல்லை; தானகப் பிறர் தூண்டுதலின்றிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் திறமை போதாது; முன்னேற்றஆர்வம் கிடையாது; உனக்கு இங்கு வேலையில்லை" என்று அதிலே கண்டிருந்தது.

பிறர் தூண்டுதலின்றியும், பிறர்ஏளனங்களை எதிர்த்துநின்றும் நல்லகாரியங்களைச் சாதித்துக்கொள்ளும் திறமை, மனத்திடம்என்பன நம்ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அவசியம் தெரியுமா? இது இல்லையானல் நமது வாழ்க்கையில் வெற்றியென்பது கிஞ்சித்தும் கிட்டாது. முன்னேற்றஆர்வம் இல்லையானல் காரியசித்தி பெறுவதற்கான முயற்சி கிடையாது. லௌகீக வாழ்க்கைக்கு மாத்திரமல்ல, முக்கியமாய் நமது ஞானவாழ்க்கைக்கும் இம்முயற்சி மகாஅவசியம்.

கீழ்திசையில் அவருடைய நட்சத்திரத்தைப் பலர்பார்த்திருப்பர். ஆனல், சோதிடசாஸ்திரிகள் மூவர் மாத்திரமே அதை வழிகாட்டியாகஏற்று அவரை ஆராதிக்கும்படியாகப் புறப்பட்டார்கள் (மத். 2:2.). எங்கு செல்வதுஎன்று அவர்களுக்குச் சற்றும் பிடிபடவில்லை. ஆனல், அருட்பிரவாகத்தோடு கூடிய ஓர் அந்தரங்ககுரல் அவர்களை அழைத்துச் சென்றது. தேவஅழைப்புக்குச் செவிசாய்க்க விசேஷித்த தைரியமும், மனஉறுதியும் தேவை. கடவுள்குரலுக்கு 'ஆகட்டும்' என்று சொல்ல ஆன்மவீரத்துவம் அவசியம். அத்தகைய வீரத்துவத்தோடு சோதிட சாஸ்திரிகள் 'ஆகட்டும்' என்ருர்கள். அவர்களின்மனதைக் கலைக்கப் பலர் முயற்சித்தபோதிலும் அவர்கள் மசியவில்லை. அவர்கள் ஆழ்ந்த தன்னுணர்வுபடைத்த மனத்தினர்என்றே சொல்லவேண்டும். மற்றவர்கள என்னசெய்தாலும் அவர்களுக்கென்ன? கடவுளின் அழைப்புக்கு 'ஆகட்டும்' என்பதே அவர்களின் முடிவான மறுமொழியாயிற்று.

ஒருமுறைமாத்திரமல்ல, நமது வாழ்க்கையின் ஒவ்வொரு சணமும் ஆண்டவரின் குரலொலிக்கு 'ஆகட்டும்' என்று பதிலளிக்க வேணடும். அந்தச்சோதிடசாஸ்திரிகளைப் பெத்லகேமுக்கு அழைத்ததுபோலவே, நம்மையும் ஒவ்வொருமுறையும் ஒருபடி நெருங்கிவரும்படியாக அக்குரல் அழைக்கின்றது. மனித சுபாவத்திற்குமேற்பட்ட பொறுமையோடு அவர்கள் சிரமத்தைப் பாராமல், கஷ்டமும், மலைப்புக் கேதுவுமான பாதையைப்பின் பற்றினர். வழிகாட்டிவந்த நட்சத்திரம் ஜெருசலேம் நகருக்கருகே மறைந்தது. என்ருலும், அதைரியப்பட்டு மனந்தளர்ந்து போகும் கோழைகளல்ல அவர்கள். நகரில் விசாரித்தார்கள். ஏரோதரசனைத் தேடிப்போனர்கள். இஸ்ருயேலரின் ஆசாரியரிடத்தில் ஆலோசனைகேட்டார்கள். தம்மாலியன்றதெல்லாம் செய்துபார்த்தார்கள். சுகபோகந்தரும் ஏரோதரசனின் மாளிகையில் அவர்கள் தங்கிவிடவில்லை. அரசன்சொன்னதை அவர்கள் கேட்டபின் புறப்பட்டார்கள் (மத். 2 : 4-9). ஒவ்வொருவரினதும் தாராளகுணத்திற்குத் தக்கபடியே ஆண்டவரும்நம்மிடமிருந்து பரித்தியாகத்தை எதிர்பார்க்கிருர்.

இந்தச் சோதிடசாஸ்திரிகள் அனுபவித்த கஷ்டநஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இதனல் அவர்கள்பெற்றபயன் பார்க்கப் போனல் பரிதாபத்துக்குரிய ஓர் பச்சைப்பாலகன்! இதற்காகவா இவ்வளவுசிரமம்? ஆனல், இந்தச் சோதிடசாஸ்திரிகள சாதாரண மனிதர்கள் அல்லவே! இவர்களா வெளித்தோற்றத்தால் ஏமாந்து போகிறவர்கள்? இவர்களின் ஞானக்கண்கள் அருள்ஒளியினல் தூண்டப்பட்டுத் திரையை ஊடுருவிக்கொண்டு மறைந்திருந்த தேவனைத் தரிசித்தன. எப்பேர்ப்பட்ட வெகுமானம்! தேவனன பாலனை அவர்தாயான மரியம்மாளோடு கண்டு, அவர்கள் சாஷ்டாங்கமாகவிழுந்து ஆராதித்தார்கள் (மத். 2 : 11). தங்கள் பொக்கிஷங்களையல்ல, தங்களைத்தாமே பாதகாணிக்கையாக வைத்தார்கள். அவரைத் தொட்டுக் கொஞ்சிமுத்தமிட்டார்கள். மரியாயின் அந்தரங்க இதயசிந்தனைகளைக் காதாரக்கேட்டு மகிழ்ந்தார்கள். மக்களுள் மகாநீதிமானன சூசையப்பரைக் கண்டு களித்தார்கள். ஆண்டவரின் குரலொலிக்கு 'ஆகட்டும்' என்ற பதிலின்பலன் அன்ரே இது!

பெத்லகேம் குடிலிலிருந்து எழுகின்ற அழைப்புக்கு நாம் அளிக்கும்பதிலாகத் திகழவேண்டும் நமதுவாழ்க்கை. நம்மில் எத்தனைபேர் கடவுளுக்கு 'ஆகட்டும்' என்று பதிலளித்திருக்கக்கூடும்? எத்தனைபேர் அப்படிப்பதிலளித்திருக்கிருேம்! வாழ்க்கையில் குறுக்கிடும் முதல் இடையூறுகண்டு பின்வாங்கினவர்கள் எத்தனைபேர்! பெத்லகேம் குகையை நோக்கிச்செல்லாது ஏரோதரண்மனையின் சுகபோகஙகளை அனுபவிக்கத் தங்கிவிட்டவர்கள் எத்தனைபேர்! குகையை அடைந்ததும் பார்க்கப்பரிதாபகரமான பாலகனைக் கண்டு மனமுடைந்து திரும்பினவர்கள் எத்தனைபேர்!

ஆண்டவரைப் பின்பற்ற வேண்டுமானல் நமக்கும் பொறுப்புள்ள தன்னுணர்வுபடைத்த மனத்திடன வேண்டும. கும்பல் பக்திஎன்ற ஒன்று கிடையாது. கும்பலில்எழும் ஆவேசக்கூப்பாடு நம்மை ஆண்டவரிடம் கூட்டிச்செல்லாது. தானகச்சாதிக்கக்கூடிய சுயசக்தி அவசரம். நம்மை ஆண்டவருடைய பாதையில் தடுக்கவல்ல இடுக்கண்கள் பல. ஏரோதன் மாளிகையிலும் வசீகரமானது சுகபோகந்தரும்இவ்வுலகம். பெத்லகேம் பாதை ஒடுக்கமானது, இடையூறு நிறைந்தது. வழியில் தந்திரசோதனைகளும், மாயசால மக்கள்காட்சிகளும் உள. என்ருலும் சோதிட சாஸ்திரிகளைப் போல நாமும் மனத்திடமாகக் குகையைநோக்கி முன்னேற வேணடும். இதுவே மனுமகனைக் கண்டுகளிக்க வழிஎன்க!

— தி. இ. தூ.

# காவலனே வாழ்க!

விருத்தம்

சந்தமுறு பொதியைவரு தென்றலைந்
தோடிவருந் தமிழில் தோய்ந்த
சுந்தரநற் காவலனே! சத்தியமா
மறைவிளக்குஞ் சுடரே! மக்கள்
சிந்தைவரு பவப்பிணிக்கோர் திருமருந்தே!
இசையெட்டுத் திசையும் முட்ட
அந்தமிலான் தொண்டுபுரி ஊழியனே!
வாராய்என் றழைத்தோம் வாழி!

●

வானிலுறு மின்னலென நீரிலுறு
குமிழியென மறைவ தன்றிக்
கானிலெறி நிலவென்னப் பயன்கொடா
இதழ்கள்பல கண்ணிற் கண்டோம்
தேனில்விளை கட்டியெனப் பதிற்றெண்பான்
ஆண்டுகளுந் தெவிட்டத் தந்த
தானில்நிகர் தானன்றி வேறறியாக்
காவலநீ! தழைத்து வாழி!

●

விளம்புதற்கே யரிதான விமலனருள்
நெறிகாட்டி அலகை சேனைக்
களமுருகிக் கண்ணினிய ஆன்மநலங்
கரைகாணக் கடல்போல ஓங்க
வளம்பெருக்கி மனம்வாக்குக் காயமெலாந்
தூய்மையுடன் வளர்த்தே மக்கள்
உளங்குளிர விருந்தளிக்கும் ஒப்புயர்வில்
லாதகா வலனே வாழி!

●

அற்புதனர் திருவாக்காம் அமுதூட்டி
அதிபர்களைச் சுனைமி லாட்டி
விற்பனர்தம் பொருள்கூட்டி மயல்விளைக்கும்
பவவிருளை விலக்கி யோட்டிச்
சொற்பொருளாற் பரிமளிக்கும் கவிதைமலர்க்
குவியல்களைத் தொடுத்துச் சூட்டிப்
பற்பலவாய் ஞானமறை நாட்டிவரும்
காவலபல் லாண்டு வாழி!

— "ஞானி"

※ இதுவரை எக்காலத்திலாவது மிகப்பெரும்பாரத்தைத் தூக்கியெடுத்து உலகப்பிரசித்திபெற்ற மனிதர் யார்?

ஓர்பிரான்சிய கனடியரான 25 ஸ்ரோன் — அதாவது 350 ருத்தல் நிறையுடையவரான லூயிஸ் சிர் (1863—1912) என்பவரே. இவர் 1896-ம் ஆண்டு சிக்காகோநகரிலே 4,133 ருத்தல் — அதாவது 1·84 தொன் பாரத்தைத்தூக்கி உலகப்பிரசித்திபெற்ருர். இவரதுமார்பின் சுற்றளவு $61\frac{1}{2}$ அங்குலம். புசத்தின்சுற்றளவு 22 அங்குலம்.

※ பாத்திமாவிலே தேவதாயாரின் காட்சிபெற்ற பிள்ளைகளில் ஏற்கனவே இறந்துபோன ஜசிந்தாவின்சரீரம் எங்கே அடக்கஞ்செய்யப் பட்டிருக்கிறது?

பாத்திமாவிலே மங்களவார்த்தைச் சிற்ருலயத்தில் அடக்கஞ்செய்யப் பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புத்திரையின் நடிகர்கள்

—: S. அமல், B. Sc. :—

ருஷியஆட்சியிலுள்ள கிழக்குப்பேர்லின்நகரில் அன்றிரவு ஓர்பெரிய தியேற்றரில் நோரா, இஸ்வான் என்ற 'இளம்தம்பதிகள் நடனமாடுவதைக்காண மக்கள் கூடியிருந்தனர். நடனம் தொடங்கும் நேரமாகிவிட்டது. ஆனால், திரை நீக்கப்படவில்லை. தியேற்றர்முதலாளி மேடையில்தோன்றி, "நமது திறமைமிக்க நடனகலைஞர்கள் மோட்டர்விபத்தில் அகப்பட்டுக்கொண்டனர்; இப்பொழுது ஆஸ்பத்திரியில் இருப்பதால் இன்று நடனம்இராது" எனக் கூறினர். முதலாளிகூறியது உண்மையல்ல. முழுப்பொய்.

நடனம் தொடங்க மூன்றுமணித்தியாலங்களுக்குமுன் நோராவும், இஸ்வானும் தங்கள் ஹோட்டல்அறையிலிருந்து நழுவிவிட்டனர். மேற்குஜேர்மனிக்குச்செல்லும் றெயினில்ஏறி இரும்புத்திரையைக் கடந்துவிட்டனர். அவர்கள்பக்கத்தில் அதிர்ஷ்டம்இருந்தது. வழியில் எவருஞ்சந்தேகப்பட்டு அவர்களைச் சோதனையிடவில்லை. நடிகர்கள் அமெரிக்க அதிகாரிகளிடம் சரண்புகுந்தனர். சிலநாட்களில் அவர்கள்வெளியேறியசெய்தியை உலகமுழுவதும் அறிந்தது. இன்று அவர்கள் லண்டன், பரீஸ், நியூயோர்க் முதலாம் நகர்களில் நடனமாடி. உலகப்புகழ்பெற்று வருகின்றனர்.

நோராவும், இஸ்வானும் ஹங்கேரியைச் சேர்ந்தவர்கள். சில ஆண்டுகளுக்குமுன் இவர்களின் நடனத்தைக் கண்டபொதுவுடைமைத்தலைவர் தமது கட்சியைவளர்க்க இவர்கள்உதவுவார்களென்றுகருதி இருவரையும் ருஷியாவிற்கு அனுப்பிவைத்தார். லெனின்கிறுட்நகரில் தங்கியதம்பதிகள் ஏனைய ருஷிய நடிகர்களால் வெறுக்கப்பட்டார்கள். நண்பர்கள் துணையின்றி இருவரும் பலமாதங்கள் கழித்தனர். பின்னர் கட்சியின் மதிப்பைப்பெற்றுப் பெரும் புகழ்பெற்றனர். பலஆயிரம் றூபிள்கள் சம்பளமாகப்பெற்று, மற்றவர்களுக்குக் கிடைக்காத பலவசதிகளுடன் வாழ்ந்தனர். பல திரைப்படங்களிலும் நடித்துப் புகழ் ஈட்டினர். ருஷிய கட்சித்தலைவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும் சலுகைகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டன. 14, 15 வயதிலேயே கட்சியில் வளர்க்கப்பட்டுப் பொதுவுடைமைக்கொள்கையில் ஊறித்திளைத்த இவர்கள் ஏன் திடீரென்று ஓடவேண்டும்?

ருஷியாவிலே நடனத்திலும், அரசியல் புகுந்துவருவதை நோராவும், இஸ்வானும் கண்டனர். கலை நிலையங்களுக்குத் தலைவர் ஓர் அரசியல்வாதி. ஒரு கலைஞர்அல்ல. அவருக்குக் கலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இருந்தாலும் அவர் கூறுவதைத்தான் கலைஞர்கள் கேட்கவேண்டும். இந்த அரசியல்வாதிகள் நடிகர்களைப்பற்றிய எல்லாத் தகவல்களையும் தெரிந்துகொள்வார்கள். பொதுவுடைமைக்கட்சிக்கு மாறான கருத்துக்கள் தோன்றுகின்றன என்று தெரிந்தால் அந்தநடிகர்கள் கூலிவேலைக்குப் போகவேண்டியதுதான்.

ஒருநாள் ஓர்சினிமாக் கொட்டகை எரிந்துவிட்டது. அதற்காக அதன் மேற்பார்வையாளர் ஆயுட்தண்டனை விதிக்கப்பட்டுச் சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். ஒரு இளம்எழுத்தாளன் குடிவெறியில் பொதுவுடைமைக்கட்சியை இகழ்ந்து பேசியதற்காக இரண்டு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான். ஒருநடிகை தனதுநகைகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்காமல் அடகு வைத்ததற்காக ஏழு வருட சிறைத்தண்டனை பெற்றுள். ஹங்கேரியில் ஒருபெண் ஒருகிறீஸ்துவ பிரபுவை மணந்ததற்காகத் தேசத்துரோகியின் மனைவியென்று கூலிவேலைசெய்ய அவளை வற்புறுத்தினர். குளிரில் போதிய ஆடையின்றி வேலைசெய்ததால் ஒரு வாரத்திற்குள் அவள் மாண்டாள். இவைகளையெல்லாம் நேரிற்கண்ட நோராவிற்கும், இஸ்வானுக்கும் வருத்தம். ஆனால், இதைவிடப் பெரியவருத்தம் தங்கள்விருப்பம்போல் நடனமாடாமல் ஒரு அரசியல்வாதியின் விருப்பத்திற்கிசைய ஆடவேண்டியிருப்பதே என்பதுதான். நடனம்முடிந்தபின் கலைஞர்கள் கட்சியையும், கட்சித்தலைவர்களையும் புகழ்ந்துபேசவேண்டும்.

1950-ம் ஆண்டு நோரா மேடையில்தோன்றுவதற்காகத் தன்னை அலங்கரித்துக்கொண்டிருந்தாள். திடீரென்று வெளியே மக்கள் அலறும் சப்தம் கேட்டது. சன்னல்வழியே எட்டிப் பார்த்த நோரோவிற்குப் பலகுடும்பங்கள் லொறியில்ஏற்றப்படுவது தென்பட்டது. பணம்படைத்த குடும்பங்களில் பிறந்தகுற்றத்திற்காக அடிமை வேலைக்கு அவைகளெல்லாம் அனுப்பப்பட்டன. பெண்கள் பைத்தியங்கொண்டவர்கள்போல்கதறி லொறியில்ஏற மறுத்தார்கள். இக்கோரகாட்சி நோரோவின் மனதை உருக்கிற்று. அன்றிரவு அவளால் தூங்கமுடியவில்லை "இக்கொடிய ஆட்சிக்கா நடனம் ஆடுகிறோம்" என்று மனச்சான்று உறுத்திக்கொண்டேயிருந்தது. அடுத்த சிலவாரங்களில் ஹங்கேரியிலிருந்து 45,000 மக்கள் அடிமைவேலைத்தலங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.

அரசியல்வாதிகளின் செயல்களை நோரோவால் பொறுக்கமுடியவில்லை. இஸ்வானிடம் தன்கருத்தைத் தெரிவித்தாள். இஸ்வானுக்கும் அவள்கூறுவது சரியெனத் தோன்றிற்று. ஆனால், சந்தர்ப்பம் கிடைக்கும்வரை பொறுத்திருப்பதென்று முடிவுசெய்தனர்.

1953-ம்ஆண்டு கிழக்குப்பேர்லினிலே நடனமாட இருவரையும் கட்சித்தலைவர்கள் அனுப்பி வைத்தார்கள். நோரோவிற்கும், இஸ்வானுக்கும் மிகவும் மகிழ்ச்சியென்றாலும் வெளியில் காட்டவில்லை. கிழக்குப் பேர்லினை அடைந்ததும் இரும்புத்திரையைவிட்டு வெளியேறமுயன்றனர். அதில் வெற்றி கண்டு இன்று சுதந்திரமாக நடனம் ஆடி வருகின்றனர். "சுதந்திரத்தில்தான் கலைவளரும். கலையைச் சங்கிலியாலும், சிறையாலும் அடைத்துவைக்கமுடியாது" என்று இந்தஇளம்தம்பதிகள் கூறுகின்றார்கள்.

— முன்னோடி

# மணிமொழிகள்

- உனது ஆஸ்தியைக்கொண்டு தருமங்கொடு — (யோபு 4 : 7.)
- தருமங்கொடுத்து உன்பாவங்களுக்குப் பரிகாரஞ்செய் — (தானி. 4 : 24.)
- கொடு, உனக்குக் கொடுக்கப்படும் — (லூக். 6 : 38.)
- தருமங் கொடுக்கும்போது உன்வலதுகை செய்வதை இடதுகை அறியாதிருக்கக் கடவது — (மத். 6 : 3.)
- இரக்கமுடையவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கம் அடைவார்கள் — (மத். 5 : 7.)
- தனக்காக ஆஸ்திக்காரனுயிராமல் ஏழைகளுக்காக ஆஸ்திக்காரனுய் இருப்பவனே திருச்சபையின் மெய்யான ஆஸ்திக்காரன் — (அர்ச். அம்புரோசியார்.)
- உன்னையன்றி உன்னைப்படைத்தகடவுள் உன்னையன்றி உன்னை இரட்சிக்கமாட்டார் — (அர்ச். அகுஸ்தீன்.)
- உலககாரியங்களில் நமதுநாட்டத்தை வைப்பது சுத்தமதியீனம். ஏனெனில், எவ்வளவுக்கு நாம் அவைகளைச் சிநேகிப்போமோ, அவ்வளவுக்கு நாம் அவைகளை மரணசமயத்தில் விட்டுப் பிரியும்போது வெகுகஸ்தி அனுபவிப்போம்.
- தேவபயமே ஞானத்தின் ஆரம்பம். ஞானத்தையும், போதனையையும் மதியீனர் புறக்கணிக்கிறார்கள் — (பழ. 1 : 7.)
- மகனே! ஆண்டவருடைய கண்டிப்பை அலட்சியம்செய்யாதே. ஏனெனில், ஆண்டவர் யாரை நேசிக்கிறாரோ அவனைக் கண்டிக்கிறார். தந்தை தன்மகனிடம் சந்தோஷங் கொள்வதுபோல் அவரும் உன்னிடம் சந்தோஷங் கொள்ளுகிறார் — (பழ. 3 : 11, 12.)
- ஞானமுள்ள புதல்வன் தன்பிதாவைச் சந்தோஷப் படுத்துகிறான். ஆனால், மதிகெட்டமகனோ தன்மாதாவுக்குக் கஸ்தியை வருவிக்கிறான் — (பழ. 10 : 1.)
- ஆண்டவருடைய ஆசீர்வாதம் நீதியின் சிரசின்மீது இருக்கும். அக்கிரமிகளின்வாயில் அநீதம் மறைந்திருக்கும் — (பழ. 10 : 6.)
- ஆண்டவருடைய கற்பனைகளை அனுசரித்துநடக்கும் பரிசுத்தவான்களின் பாக்கியமே பாக்கியம் — (சங். 118 : 1.)
- கெட்டவாசகம் நல்லொழுக்கத்தைக் கெடுத்துவிடும் — (கொரி. 15 : 33.)
- உன்னுடைய ஆண்டவராகிய சர்வேசுரனை உன்முழு இருதயத்தோடும், முழுஆத்துமத்தோடும், முழுமனதோடும், முழுப்பலத்தோடும் சிநேகிப்பாயாக — (மாற். 12 : 30.)

மட்டக்களப்பு,

## தாண்டவன்வெளித் தபால்

**நத்தால் புதுவருடப்பரிசில்கள்:** மட்டக்களப்பு, தாண்டவன்வெளி பரிசுத்தவியாகுலமாதா கோயில்பங்கைச் சேர்ந்த பாடசாலைமாணவர் மாணவிகளுக்குக் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களால் நத்தால், புதுவருடப்பரிசில்கள் வழங்கப்பட்டன. நத்தால் தாத்தாவாகத் திரு. என். நீக்கலஸ் என்பவர் அலங்கார உடைதரித்து, நீண்டவெள்ளைத் தாடியுடன் ஓர் துவிச்சக்கரவண்டியிலே கோவில்வீதியால்வந்து கட்டளைக்குரவரையும், மாணவர்மாணவிகளையும், ஏனையோரையும் வரவேற்றார். பின்னர் ஆண்பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கே. எல். இராசேந்திரம்அவர்களாலும், கட்டளைக்குரவராலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பாடசாலைமாணவர்மாணவிகள் திவ்வியபூசைகண்டு, தினப்பூசைத் துண்டுகள்பெற்று வந்தகின்பயனுய்த் தங்கள்வரவுக்கேற்கப் பரிசில்கள் பெற்றுக்கொண்டார்கள்.

**கோடியேற்றுவிழா:** மட்டக்களப்பு, தாண்டவன்வெளிக்கோயில் திருநாளை முன்னிட்டுச் சென்ற1-ந் தேதி விமரிசையாகக் கொடியேற்றுவிழா நடந்தேறியது. அன்று பி. ப. 5 மணியளவில் பங்குக்கிறீஸ்தவர்கள் கட்டளைக்குரவரை வாத்தியவரிசையுடன் வரவேற்றனர். பின்னர் பூசைப் பரிசாரகர் கொடியேந்திச்செல்ல, ஏனையோரெல்லாம் மேளமரியாதையுடன் கொடித்தம்பத்தை அடைந்தனர். அங்குகொடி ஆசீர்வதிக்கப்பட்டபின் அதனையேற்றுவிழா நடைபெற்றது. மாசி 5-ந்திகதி திருநாள் கொண்டாடப்படும். எனவே, தினமும் செபமாலை, மாலைஆராதனை, திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் ஒழுங்காக நடைபெறுகின்றன.

—நிருபர்.

---

● இங்கிலாந்திலே பிறெஸ்ரன்நகரகத்தோலிக்கதருமசபை அங்கே கிறிஸ்மஸ்விழாவின்போது பாலன் பிறந்த குடில்ஒன்றை அமைக்கும்படியாய்ப் பகிரங்கமான ஓர்இடத்தை வசதிபண்ணிக் கொடுக்கவேண்டுமென்று நகரசபையைக் கேட்டுக்கொண்டது. அதற்குப்பதில் அச்சபையானது நகரமண்டபத் தூண்வரிசைகளின்கீழ் 300 பவுண் செலவிட்டுப் பதினொரு சுரூபங்கள், உருவங்களுடன் கூடிய ஓர்குடிலை நகர்வாசிகளுக்குப் பொதுவாக அமைத்துக்கொடுக்கலாயிற்று.

● கம்யூனிஸ்தநாடுகளிலும், வேறிடங்களிலும்வேதகலாபனைக்குள்ளாய்த் துன்புற்று வாடுவோருக்காகச் செபஞ்செய்யும்நாளாய்ச் சென்றபுதுவருடப் பிறப்புத்தினத்தை அனுசரிக்கவேண்டுமென்று "நல்மனதுள்ளவர்க"ளையெல்லாம் ஐக்கியஅமெரிக்கதேச அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் கிறிஸ்மஸ்தினத்துக்கு முதனாள் விடுத்த செய்திஒன்றின்மூலம் கேட்டுக்கொண்டார்கள். அங்கே 1952-ம் ஆண்டுமுதல் இந்தச்செபதினம் அனுசரிக்கப்பட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

## பெண்மணிகொண்ட ஆவல்

அயர்லாந்தில் ஷான்னன்நகர் விமானநிலையத்தில் அலுவல்பார்ப்பவர்களில் மரி கெனீலி என்ற 24வயதுள்ள பெண்மணியும் ஒருத்தி. பிரயாணிகளின் கோஷ்டியொன்று அவளுடன் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், தனக்குள்ள ஆசைகளில் அதிமுக்கிய இடம் வகிப்பது ரோமாபுரியையும், பரிசுத்த பாப்பரசரையும் தரிசிக்கவேண்டுமென்பதே என்றுகூறினாள். சிலநிமிஷங்களுக்குப்பிறகு பிரயாணிகளுள் ஒருவர் அவள்கையில் மூன்று நூறு டலர் நோட்டுகளைக் கொடுத்து, "இதைக்கொண்டு நீர் ரோமாபுரிக்குப் போகலாம்" என்றார். அதைத் திருப்பிக்கொடுத்துவிட அப்பெண் எவ்வளவோ முயன்றும் அப்பிரயாணி வாங்கமறுத்துவிட்டார். இவர் தனவந்தரான ஒருஇத்தாலியர். "இரண்டாவதுஉலகயுத்தத்திற்குப்பிறகும், வெள்ளத்தின்போதும் இத்தாலியமக்கள் பட்டகஷ்டங்களை நிவிர்த்திசெய்வதற்கு அயர்லாந்துமக்கள் தாராளமாக உதவிசெய்தார்கள்; அதனால் ஆயிரக்கணக்கான இத்தாலிய சிறுவர் சிறுமிகள் பயன்பெற்றனர்; ஒரு அயர் பெண்ணுக்கு உதவிசெய்யக்கூடுமாய் இருப்பதைப்பற்றி நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று அவர் கூறினார்.

## பாப்பரசரின் பதக்கம்

சமீபத்திலே மரணமடைந்த பிரான்சிய ஜனாதிபதியின் பாரியாரான திருமதி கோத்தி அம்மையாருக்கு 'புரொ எக்லேஸியா எத் பொன்திபிசே' என்ற கௌரதாபட்ட வரிசையின் முதல்தரசின்னமாகிய தங்கப்பதக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தஅம்மையார் குடும்பவாழ்க்கைக்கு ஒருநல்ல எடுத்துக்காட்டாக இருந்தமைக்காகவும், பிரான்சிய மக்களின் அன்பைக் கவர்ந்துகொண்டிருந்ததற்காகவும் இந்தப்பதக்கத்தை அளிப்பதென்று பாப்பரசர் தீர்மானித்திருந்தனர். கிறிஸ்மஸ்விழாவின்போது ஜனாதிபதியின் இல்லத்தில் கோத்தி குடும்பம்முழுதும் இருக்கையில் பதக்கத்தை அளிப்பதென்று திட்டஞ்செய்யப்பட்டிருந்தது. ஆனால், சிலதினங்களுக்குமுன் மதாம்கோத்தி இறந்துவிட்டார்.

## நவமான தூரதிருஷ்டிக்கருவி

ஆஸ்திரேலியாவின் விஞ்ஞான—கைத்தொழில் ஆராய்ச்சிஸ்தாபனம் உலகின் மகாப்பிரமாண்டமான "ரேடியோ ரெலெஸ்கோப்" எனப்படும் வானொலித்தூரதிருஷ்டிக் கருவிகளுள் ஒன்றை நிர்மாணித்துவருகின்றது. இதனைநிர்மாணிக்கும்வேலை இன்னும் ஆறுமாதகாலத்துள் பூர்த்தியடைந்து, அதன்மேல் தூரதிருஷ்டியந்திரம் அமைக்கப்பெற்றுவந்து, 1958-ம் ஆண்டின் நடுப்பகுதியிலே பாவனைக்குத் தயாராயிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது உலகில்இருந்துவருகின்ற மகாப்பிரமாண்டமான தூரதிருஷ்டிக்கருவிகளுக்குத் தென்படாதனவாய் வெளிவானப்பரப்பில் இருந்துவருகின்ற நட்சத்திரங்களையும், மற்றும்பொருட்களையும் இது சமீபத்திற்கொணர்ந்து காண்பிக்கக்கூடியதாகும். கலிபோணியாவிலே மவுண் பலோமார் குன்றின்உச்சியில் இருந்துவருகின்ற இராட்சத தூரதிருஷ்டிக் கருவிகளைக்காட்டிலும் இன்னும அதிக தூரத்தினை இதன்மூலம் பார்க்கமுடியுமாம்.

---

● உலகப்பிரசித்திபெற்ற போட் மோட்டர் கம்பெனியானது திரு. ஹென்றிபோட்அவர்களால் அடியிடப்பெற்று இப்போது 52 வருடமாகிறது. ஆனால், இப்போதுதான் அதன்பொருள்வளம்பற்றிய அறிக்கை முதன்முதலாக வெளிவந்திருக்கிறது. அதன்படி போட்மோட்டர்கம்பெனி 248 கோடியே 40 லட்சத்து 10 ஆயிரத்து 550 டலர் பெறுமதியுடையதாகும்.

● நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவர் தூரகிழக்கு நாடுகளிலுள்ள அமெரிக்க போர்வீரர்களுடன் ஐந்தாம்முறையாக இம்முறையும் கிறிஸ்மஸைக் கழிக்கலாயினர். அவர் கோறியா, அலஸ்கா, ஜப்பான், ஒகினுவா, போர்மோசா, பிலிப்பைன்ஸ்முதலாம் நாடுகளைத் தரிசித்தார்.

● பர்மாவின் முதலாவது தேசிய சற்பிரசாதமகாநாடு வருகிற மாசிமாதம் 2-ந் திகதிமுதல் 5-ந்திகதிவரையிலே றங்கூன்நகரில் நிகழவிருக்கின்றது. இந்த மகாநாட்டுக்குத் தம்முடையபிரதிநிதியாகப் பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் வலேரியான் கிறுசியாஸ்ஆண்டவரைப் பரிசுத்தபாப்பரசர் தெரிவுசெய்திருக்கின்றார்.

● இந்தியாவிலே இந்தூரிலுள்ள பிச்சைக்காரர் வட்டிக்குப் பணங்கொடுக்கிறார்களென்றும், கள்ளவியாபாரம் நடத்துகிறார்களென்றும், இத்தகைய தொழில்களால் அவர்கள் மாதமொன்றுக்குச் சராசரிவீதமாய்த் 90,000 ரூபா சம்பாதிக்கிறார்களென்றும் மத்தியபாகத் சமூகக்கல்விச் சமிதையின் அறிக்கை தெரிவிக்கின்றது. இந்தூரில் தற்போது 2,100 பிச்சைக்காரர் இருக்கின்றனராம். இவர்களில் 1,000 பேரும் வேலைசெய்து பிழைக்கக்கூடிய திடகாத்திரமுடையவர்களாம்.

● மலாய்-தாய்லாந்து எல்லைப்புறத்தில் காணப்படும் மலாய கம்யூனிஸ்த பயங்கரவாதிகளைச் சுட்டுத்தள்ளுவதற்கான பூரணஅதிகாரத்துடன் மலாய பாதுகாப்புப்படைகள் சென்ற 9-ந்திகதிகாலை மிகப்பயங்கரமான தாக்குதலை ஆரம்பித்துள்ளன. மலாய கம்யூனிஸ்த தலைவனான சிங்பெக் என்பவனுடன் சிங்கப்பூர், மலாய் முதன்மந்திரிகள் நடத்திவந்த யுத்தநிறுத்தப் பேச்சுவார்த்தைகள் முறிந்தமையே இத்தாக்குதலுக்குக் காரணமாகும்.

## தமிழ்ப்பெரியாரின் மறைவு

யாழ்ப்பாணத்திலே கால்நூற்றாண்டுக்கு மேற்படச் சமூகசேவைமுதலாம் பல்வேறுசேவைகளிலும், அரசியலிலும் சிறப்பாக ஈடுபட்டுவந்து பிரஸ்தாபம்பெற்றவரும், நியாயதுரந்தாரும், யாழ்ப்பாணப் பட்டினசங்கத்தில் பலவருடகாலம் ஓர்அங்கத்தவராயும், ஓர்காலம் அதன்தலைவராயும் விளங்கியிருந்தவரும், தயை, அமைதி, சாந்தம், அடக்கம்முதலாம் சீரிய குணங்கள் வாய்ந்தவருமான திரு. ஆர். சிவகுருநாதர்அவர்கள் சென்ற 10-ந் திகதி காலஞ்சென்ற துயரசெய்திஅறிந்து மனவருத்தமுற்றோம். இப்பெரியாரின் மறைவாலே துயருறுவாருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

## வவுனியா இடைத்தேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் வவுனியாத்தொகுதிஸ்தானத்துக்குப் பிரதிநிதிஒருவரைத் தெரிவுசெய்வதற்தான இடைத்தேர்தல் அடுத்தமாசிமாதம் 15-ந் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இந்தஸ்தானத்துக்குஅபேட்சகர்கள்இருவர் போட்டியிலே கட்டுப்பணங்கட்டியிருக்கின்றனர். இவர்களில் ஒருவர், முன்பு வவுனியாப்பிரதிநிதியாய் இருந்துவந்த திரு. சி. சுந்தரலிங்கம்அவர்கள், மற்றவர், கொழும்புநகரசபை அங்கத்தவருள்ஒருவரான திரு. பி. நந்தசேன கூறே என்பவர். இவர்கள் தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டியதினம் நாளை 13-ந் திகதி வெள்ளிக்கிழமையாகும்.

---

## பெயர்மாற்றம் அறிவித்தல்

இதுவரை சதாசிவம்என்றும், சின்னத்தம்பிஎன்றும், மரியதாஸ்என்றும் அழைக்கப்பட்டுவந்த எனது பெயர் இன்றுதொடக்கம் சின்னத்தம்பி மரியதாஸ்என்பதாக மாற்றிக்கொள்ளப்படுகிறதென்பதை இத்தால் அரசாங்கத்தினருக்கும், பொதுச்சனங்களுக்கும் அறிவித்துக்கொள்ளுகின்றேன்.

S. S. Mariathas,
Teacher.

Soorawathai,
Chunnakam.
11-1-56.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

குழந்தை யேசுவைக் கரத்தில்ஏந்திய அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியாரே, அடியேன் உம்மிடம் கேட்டுக்கொண்ட நேர்த்தியை ஐம்பதுவருட காலமாக என்மனம்திருப்தியடையக் கேட்டகேட்டபடி தந்துவந்தீர். மேலும் முந்தினவருடங்களைப்போல் இவ்வருட மூதற்செவ்வாய்ப்பக்தியும் இனிதே நிறைவாயது. மற்றும் நடக்கிற ஐம்பதாவது வருடத்தை இரண்டாவதுயூபிலியாகவும்நினைந்து சந்தோஷப்படுகிறேன். தேவரீர்விதைத்திவரும் புதுமைவித்து ஐம்பதுவருடமாய் முளைத்துத் தழைத்து, பூத்துக்காய்த்துப் பழுத்துச் சுவைகொடுத்துக்கொண்டு வந்திருக்கின்றது. இன்னும் என்ஆயுள்வரையும் மேன்மேலும் உமது புதுமைஅருள்மாரியைச் சொரியும்படியும் மன்றாட்டமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாதகல் அ. செ. அ.

## பள்ளிக்கூடப் புஸ்தகங்கள்

இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்காக விசேஷமுறையில் எழுதப்பட்டது.

### கத்தோலிக்க வாசகம்

| | | ரூ. ச. |
|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | 50 |
| மேற் பிரிவு | ... | 50 |
| இரண்டாம் புத்தகம் | ... | 60 |
| மூன்றும் புத்தகம் | ... | 70 |
| நாலாம் புத்தகம் | ... | 80 |
| ஐந்தாம் புத்தகம் | ... | 90 |

### கணிதம்
(எஸ். ஏ. எற்வேட்)

#### எண் கணிதம்

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | 1-25 |
| மூன்றும் வகுப்பு | ... | 1-50 |
| நாலாம் வகுப்பு | ... | 1-75 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 1-90 |
| ஆறும் வகுப்பு | ... | 2-00 |
| ஏழாம் வகுப்பு | ... | 2-25 |
| எட்டாம் வகுப்பு | ... | 2-50 |

#### மனக்கணிதம்

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | ... | 50 |
| மூன்றும் வகுப்பு | ... | 60 |
| நாலாம் வகுப்பு | ... | 70 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 80 |
| ஆறும் வகுப்பு | ... | 1-25 |

#### வீச கணிதம்

| | | |
|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2-50 |
| இரண்டாம் பாகம் | ... | 2-50 |
| மூன்றும் பாகம் | ... | 3-00 |

#### கேத்திர கணிதம்

| | | |
|---|---|---|
| முதலாம் பாகம் | ... | 2-50 |
| இரண்டாம் பாகம் | ... | 3-00 |
| மூன்றும் பாகம் | ... | 3-00 |

### நவமணி வாசகம்

| | | |
|---|---|---|
| கீழ்ப் பிரிவு | ... | 50 |
| மேற் பிரிவு | ... | 50 |
| இரண்டாம் வகுப்பு | ... | 60 |
| மூன்றும் வகுப்பு | ... | 70 |
| நாலாம் வகுப்பு | ... | 80 |
| ஐந்தாம் வகுப்பு | ... | 90 |
| ஆறும் வகுப்பு (தற்போது இல்லை) | | |
| ஏழாம் வகுப்பு | ... | 1-00 |

* * *

## விளம்பர விகிதம்

| | | ரூ. ச. |
|---|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் | ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். | ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) | | |
| இரண்டுமுறைக்கு | ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடிதமூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

சிந்தியாமல் வேகமாகப் பேசுவது "பிறேக்" இல்லாமல் வண்டியை வேகமாகச் செலுத்துவது போலத்தான்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 12-1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிதபீன்

அருமைச் சகோதரங்களே !

அடுத்த வெள்ளிக்கிழமை யேசு பிரத்தியட்சமான திருநாளின் எட்டாம்நாட் கொண்டாட்டம. இவ்வருடந்தொடங்கி இத்தினம் எட்டாம் நாட்கொண்டாட்டமாயல்ல யேசுவின் ஞானஸ்நான ஞாபகத் திருநாளாகக் கொண்டாடப்படும்.

யேசு ஏறக்குறைய முப்பதாம் பராயமாயிருந்தபொழுது யுவானியார்கையால் தபத்தின் ஞானஸ்நானம் பெற்றுத் தமது போதக சீவியத்தைத் தொடங்க விரும்பினர். யேசு யாரென்று ஸ்நாபக அருளப்பர் அறிந்தபடியால் அவர்மறுத்தார். "நான் உமது கையால் ஞானஸ்நானம் பெறவேண்டியிருக்க நீர் என்னிடத்தில் வரலாமோ ?" என்ருர். அதற்கு யேசு : "தேவதிருவுளத்தை நிறைவேற்றும் பொருட்டு" அப்படிச் செய்யும்படி ஏவினர்.

யுவானியார் சம்மதித்து ஞானஸ்நானங் கொடுத்தார். அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் புறவடிவமாக யேசுவின் தலைமேல் இறங்கினர். "இவர் நமது பிரியகுமாரன் ; இவர் கூறுவதைக் கேளுங்கள்" என்று பிதா, கூறினர். அதன்பின் பரிசுத்த ஆவியின் ஏவுதலின்பேரில் யேசுதபஞ்செய்ய வனஞ் சென்ருர்.

இதைத்தான் இத்திருநாள்நினைவூட்டுகிறது. இச்சம்பவத்தில் யேசுவின் தாழ்மையையும், தேவ திருவுளத்தை நிறைவேற்றுவதில் விருப்பத்தையும் நாம் காண்கிரேம். பிதா சருவேசுரன் தமது குமாரனைப்பற்றிக் கூறியஅறிக்கையையும் நினைவுகூர்ந்து யேசுவின் போதனைக்குச் செவிசாய்த்து நடக்க வேண்டும். சுபம் !

உங்கள் அன்புள்ள,

அண்ணு.

---

## நல்ல நண்பன்

—※—

சிங்கராயன், அடைக்கலம் என்னும் இருவாலிபர் ஒரு ஊரில் இருந்தார்கள். சிங்கராயன் பக்தியுள்ள நல்லகிறீஸ்தவன் ; ஞாயிற்றுக்கிழமை தோறும் பாவசங்கீர்த்தனம் செய்து திவ்வியசற்பிரசாதம் அருந்தி முழுப்பூசைகாண்பான் ; விலக்கப்பட்ட வேலைகளையும் செய்யாமல் ஞாயிறுவாரக் கடமைகளைப் பிரமாணிக்கத்துடன் அநுசரிப்பான். அடைக்கலமோ தனது இஷ்டப்பிரகாரம் சுயேச்சையாய்த்திரிந்து பணம்சம்பாதிப்பதிலேயே தனது கவலையெல்லாம் செலுத்திவருவான் ; ஞாயிற்றுக்கிழமையில் முதலாய் வேலைசெய்யப் பின்வாங்கான். ஒருநாள் அடைக்கலம் தனது நண்பனுகிய சிங்கராயனைப் பார்த்துச் சொல்வான் : அடே, சிங்கம்! ஞாயிற்றுக்கிழமையில் ஏன் வேலைசெய்யக்கூடாது ?

சிங். : ஏனெனில், செய்யக்கூடாதென்பது திருச்சபைக்கட்டளை. திருச்

( தொடர்ச்சி 4-ம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்ம பாவம்

**ஹாஸ்சியக்கார அர்ச். பிலிப்பு :**

அர்ச். பிலிப்பு விளையாட்டிலும் நகை யூட்டுவதிலும் அதிக விருப்புடையவர். இவர் மக்களை விசேஷமாய் வாலிபரை நேசித்தார் எனினும் எல்லாவற்றிலும் மேலாய்ச் சர்வேசுரனை நேசித்ததின் நிமித்தம் அர்ச்சியசிஷ்டரானார்.

இவரின் வாழ்நாளில் இவர்கொண்டிருந்த ஒரே அவா என்னவெனில் சனங்களைப் பாவம்செய்யாது தடுத்தலேயாம். "சர்வேசுரனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதிருந்தால் அதுவேஎனக்குப் பிடித்தமானது "என்றும்," பிள்ளை பாவம்செய்வதைவிட என்முதுகை வெட்டிவிளையாட இடங்கொடுப்பேன்" என்றும் அவர் கூறியுள்ளார்.

இவர் அடிக்கடி பிள்ளைகளுடனேயே விளையாடுவார். இவர் வயதுவந்தவரானாலும் சிறுபிள்ளையைப்போல் உலாவித் திரிவார். இவர் ஏன் இப்படிச்செய்தார்? எல்லாவகையான கொடுமைகளிலும் பாவமே மிக அக்கிரமமானது. மேலும் வாலிபர்கள் வேலையின்றிச் சோம்பலாய் இருப்பதினால் பாவப் பழக்கத்துக்கு ஆளாகின்றார்கள் என்பதையும் இவர் அறிந்திருந்தார். இவர் வாலிபர்கள் அதிகநேரம் வேலைசெய்து சந்தோஷமாய் இருந்தால் பாவம்கட்டிக்கொள்ள அவர்களுக்கு நேரம் கிடையாது" என்றும் கூறினார்.

**காயீனும் ஆபேலும் :**

ஆதாமும் ஏவாளும் சிங்காரத்தோப்பிலிருந்து துரத்தப்பட்டபின் இருமக்களைப்பெற்றார்கள் அவர்களில் மூத்தவன் காயீன், இளையவன் ஆபேல். இவர்கள் பிறக்கும்போதே சென்மபாவத்துடன் பிறந்தனர். இருவரும் ஒருமித்தேவாழ்ந்தனர். இவர்களின் ஆரம்பிராயத்தில் எதுசரி எதுபிழை என்று அறியும் சக்தியைப் பெற்றனர். சர்வேசுரன் இவர்களுக்கு மனச்சாட்சியைக் கொடுத்திருந்தார். மனச்சாட்சியை எதிர்த்து நடப்பார்களேயானால் கன்மபாவத்தைக் கட்டிக்கொள்வர். சென்மபாவத்தின் விளைவாக அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டியிருந்தது.

காயீன் கமக்காரனானன். ஆபேல் இடையனானன். ஓர்நாள் இருவரும்சர்வேசுரனுக்குப் பலிசெலுத்தினார்கள். அவர்கள் இருபீடங்களை அமைத்துத் தங்கள் உழைப்பின்முதற்பலனை, சர்வேசுரனுக்குக்கொடுத்தார்கள் காயீன் தன்பலனை விருப்பத்துடன் கொடுக்கவில்லை. இதனால் அவன் தன்மனச்சாட்சியை எதிர்த்துக் கன்மபாவத்தைக் கட்டிக்கொண்டான். சர்வேசுரன் அவனுடைய பலியை வெறுத்தார். ஆபேல் இவனுக்கு எதிர்மாறானவன். தன்மனச்சாட்சியின்படி நடந்து பரிசுத்தமாய்ச் சீவித்துவந்தான். அதனால் அவன்பலியைச் சர்வேசுரன் ஏற்றுக்கொண்டார். காயீன் தன் பலியைச் சர்வேசுரன்ஏற்கவில்லை, தம்பியின்பலியை ஏற்றார் என்பதை அறிந்து தன்தம்பிமேல் காய்மகாரம் கொண்டான். தேவனே "பாவத்தைச் செய்யாதே" என்று காயீனை எச்சரித்தார். ஆனால், காயீனே தன் தம்பியைக் கொல்ல எண்ணங்கொண்டவனாயிருந்தான்.

"வயலுக்குப்போவோம் வா "என்று காயீன் தன்தம்பியைக் கூப்பிட்டு அழைத்துச்சென்று தன்தம்பியைக் கொலைசெய்தான். இதுவோர் அக்கிரமமானபாவம். "கொலைசெய்யாதிருப்பாயாக" என்று 5-ம் கற்பனை கூறுகிறது. காயீனே தன்மனச்சாட்சிக்கு விரோத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய் நடந்து பெரும்பழியைத் தேடிக் கொண்டான். துஷ்டகாயீன் தன்வீட்டுக்குப் போகமுடியாதவனாய் இடத்துக்கிடம் அலைந்துதிரிந்தான். அவனது மனச்சாட்சி அவனை இளைப்பாற விடவில்லை. அவனே சர்வேசுரனால் சபிக்கப்பட்டவனானான்.

## சபிக்கப்பட்ட இருநாடுகள் :

அநேக வருடங்களுக்குமுன் சொதோம், கொமரு என்னும இருநாடுகளிலும அக்கிரமக்காரர்கள் இருந்தனர். அவ்விடங்களில் உள்ளவர்களில் பத்துப் பேரைஎன்கிலும் நல்லவர்கள் என்று கணிக்கமுடியாது இதனால் தேவன் அவ்விருநாடுகளையும் அழிப்பதற்கு இரு தேவதூதர்களை அனுப்பினார்.

அவ்விருநாடுகளிலும் நாலுபேர்மாத்திரமே சர்வேசுரனால் நேசிககப்பட்டவர்களாயிருந்தனர். அவர்கள்தான் லோத்தும், அவரதுமனைவியும், இருபிள்ளைகளும். சம்மனசுகள் லோத்எனபவரிடம் வந்து "உனது மனைவியையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வெகுவிரைவில் இவ்விடத்தைவிட்டுப் போ" எனக் கூறினர். லோத் ஆபத்து நெருங்கிவருவதை அறியாது மிகவும் ஆறுதலாய் வெளியேற ஆயத்தம்செய்தனர். ஆனால், தேவதூதர்கள் அவரையும், அவரது மனைவி, பிள்ளைகளையும் விரைவாய் அழைத்துக்கொண்டு நாடுகளுக்குப் புறம்பே கொண்டுபோய் விட்டனர். பின்னும் சம்மனசுகள் அவர்களைப் பார்த்துத் "திரும்பிப்பார்க்காது போங்கள்" என்று எச்சரித்தனர். இவர்கள் வெளியேறியவுடன் பாவம் நிரம்பிய சனங்களுக்குத் தண்டனை கிடைத்தது. நெருப்பும், அக்கினிக்கட்டிகளும் மழை போல் அவ்விருநாடுகளுக்குமேல் விழ, கட்டிடங்கள் அக்கினிச் சுவாலையுள் மறைந்தன. ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் யாவரும் எரிந்துசாம்பலாயினர். லோத்என்பவரின் மனைவி சம்மனசுகள் கொடுத்த கட்டளையைமறந்து தங்கள் நாட்டிற்கு என்ன நடக்கின்றதுஎன்பதையறியப் பின்திரும்பினாள். உடனே அவள் உப்புச்சிலையாக மாறிவிட்டாள். சர்வேசுரனின் எச்சரிப்பை மீறியதால் அவளுக்கு இத்தண்டனை கிடைத்தது. இருநகரங்களும் அழிந்தன. இந்நாடுகளிருந்தவிடம் இப்போது சாக்கடலென அழைக்கப்படுகின்றது. அக்கடலில் ஒருவிதமச்சமும் காணப்படுவதில்லை. சாவானபாவத்தைக் கட்டிக்கொள்பவன் சர்வேசுரனுடைய நித்தியசீவியத்தில் இடம்பெறமுடியாது. சாவான பாவம்உள்ளவன் மோட்ச கரையைக் காணமுடியாது.

## பொன் மொழிகள்

- ❋ இன்பம் இருக்குமிடத்தில் துன்பம் வந்தே தீரும்.
- ❋ உயிர்போகுமெனினும் மெய் உரைப்போமாக.
- ❋ வாக்கழிந்து போனால் மனிதன் வாசமற்ற மலரே.
- ❋ மற்றவர்கள் குற்றத்தைக் காண முயலாதே.
- ❋ உண்மையே உயர்த்தும் ஏணி.
- ❋ சீர்திருத்தம் என்பது இருப்பவற்றை உடைத்தெறிவதல்ல.
- ❋ பொருமையுடையவன் அன்புடையவனாக முடியாது.
- ❋ செல்வமும்புகழும் சிலநாட்களுக்கே.
- ❋ கடவுள் யாவர்க்கும் தந்தை; ஆகையால் யாவரும் நமது சகோதரரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல நண்பன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்குக் கீழ்ப்படியாதவன் அஞ்ஞானிக்குச் சமானமல்லவா?

அடைக். : அந்த ஞானமெல்லாம் இருக்கட்டும்; ஞாயிற்றுக்கிழமை சோம்பேறியாய்க் காலத்தைப் போக்குவதைவிட வேலை செய்வதேநலம் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

சிங். : அடே அடைக்கலம், என்னிடம் ஏழுரூபா இருக்கிறது. ஒருபிச்சைக்காரனுக்கு அதில் ஆறுரூபா தானம் செய்துவிட்டு ஒரு ரூபாவை எனக்காக வைத்துக்கொள்ளுகிறேன். அதைப்பற்றி நீ என்ன சொல்வாய்?

அடைக்.: நீ தர்மிஷ்டன், பரோபகாரி, எவ்வித பிரதிநன்றிக்கும் உரியவன் என்பேன்.

சிங் : நியாயமே! ஆனால், பிச்சைக்காரன் என்னைக் கீழேதள்ளி, காலினால் உதைத்து நான்எனக்கென்று வைத்திருக்கும் ஒருரூபாவையும் பிடுங்கிக்கொள்வானேயாகில் அவனைப்பற்றி என்ன சொல்வாய்?

அடைக். : அந்தப் பிச்சைக்காரப் பயலைப்பிடித்து, அடித்து, உதைத்து, தூக்குப்போட்டுக் கொன்றுவிடுவேன். அவனைப்போல நன்றிகெட்டபயல் உலகில் காண்பதரிது.

சிங். : நல்லது அடைக்கலம், நீதான் அந்தப் பிச்சைக்காரன். உனக்குப் பிச்சை கொடுத்தது சிங்கராயன் அல்ல, நமது நல்லதந்தையாகிய சர்வேசுரன். உனக்கும் எனக்கும் வாரத்தில் ஆறு நாள் பிச்சையாகத்தந்தருளியிருக்கிறார். இந்த ஆறு நாட்களில் நமது சுயபிரயோசனத்துக்காக வேண்டிய மட்டும் உழைத்துச் சம்பாதிக்க உத்தாரமளித்திருக்கிறார். ஏழாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையைத் தமக்காக வைத்திருக்கிறார். அந்தநாளையும் உனக்கென்று திருடிக்கொள்வது எவ்வளவு பெரிய பாதகம்! எப்பேர்க்கொத்த துரோகம்!

இப்புத்திமதியைக் கேட்ட அடைக்கலம், உயிர்போனாலும் இனி ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்ய மாட்டேன் என்று பிரதிக்கினை செய்து, தனது உயிர்த்தோழனாகிய சிங்கராயனுக்கு நன்றி செலுத்தினான்.

— பொ. டேவிற்.

---



## பொழுது போக்கு

மகன் தகப்பனாருக்கு எழுதிய கடிதத்தில்: எனக்கு மிச்சம் பணகஷ்டம். உங்களுக்கு எழுதுவதில் பயனில்லையென்று தெரியும் தபாலைப் போஸ்டில் சேர்த்தபின்னர் அதைத்திருப்பிப் பெற எவ்வளவோ முயற்சித்தேன். போஸ்ற்மாஸ்றர் திருப்பிக் கொடுக்க முடியாதென்றுவிட்டார்.

தகப்பனாரின் பதில்: நீ மனவருத்தப்படவேண்டாம். உனது கடிதம் எனக்குக் கிடைக்கவில்லை.

● ● ●

நீதிபதி : நீர் வழக்காளியைக் கட்டிப் பிடித்திருக்கிறீர். எதிரி அவரைக் கத்தியால் குத்தியிருக்கிறார். நீர் எதிரியைப் பிடித்திருந்தால் இச்சம்பவம் நடந்திராது.

சாட்சி : எவர் வழக்காளியாவர், எவர் எதிரியாவர் என்று எனக்கு அப்பொழுது எப்படித் தெரியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org